Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 269 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 6, வியாழன் 22.08.2013

## தேர்தல் முறைப்பாட்டு நிலையம் நெடுந்தீவில்

யாழ்ப்பாணம், ஓக.22
நெடுந்தீவில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு வசதியாகத் தேர்தல் முறைப்பாட்டு நிலையம் ஒன்றை அங்கு திறக்கவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற் றுத் தெரிவித்தார்.

யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுப் புதன்கிழமை நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது நெடுந்தீவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் தேர்தல் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர், நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பில் பொலிஸிலோ அல்லது எமது முறைப்பாட்டுப் பிரிவிலோ இதுவரை எந்தவொரு முறைப்பாடும் பதிவு செய்யப்பட

தொடர்ச்சி: பக்கம் 21

## யாழ்ப்பாணத்தை தளமாக பாவித்து இந்திய நிலைகளைத் தாக்கத் திட்டம்

### 8 தீவிரவாதிகள் தயார் நிலையில் என்பதை மறுக்கிறது இராணுவம்

புதுடில்லி, ஓக. 22
இலங்கையை குறிப்பாக யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதி ஒன்றைத் தளமாகப் பயன்படுத்தி இந்தியாவிலுள்ள கேந்திர நிலைகளை தாக்குவதற்குத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளார்கள். இதற்காகத் தற்பொழுது 8 தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வருகிறார்கள் என இந்திய புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

எனினும் இந்தச் செய்தியை இலங்கை இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மறுத்துள்ளார். அவ்வாறு தாக்குதல் நடத்துவதற்கான எந்தச் சாத்தியமும் இல்லை என்றும் இலங்கைத்

தொடர்ச்சி: பக்கம் 21



இனியும் நட்பு நாடா இலங்கை? 06

அதிவேக ரயில்களே அல் குவைதா இலக்கு எச்சரிக்கிறது அமெரிக்கா 07

வானவில்லை வீழ்த்தி வடதாரகை அரையிறுதிக்கு தெரிவாகியது 22

பகல் இரவு டெஸ் போட்டிகள் கொண்டுவரப் படுவது அவசியம் 23

## போர்த் தடயங்கள் அழிப்பு

### முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றுகிறது இராணுவம் நவிப்பிள்ளையின் வருகையால் என மக்கள் சந்தேகம்

கொழும்பு, ஒகஸ்ட் 22
இறுதிப்போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் போர் எச்சங்களாகக் கிடந்த வாகனங்கள் மற்றும் பொருள்கள் கடந்த சில நாள்களாக வேகமாக அகற்றப்பட்டு வருகின்றன என்று வன்னிப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப் பிள்ளையின் (நவநீதம் பிள்ளை) வருகைக்கு முன்பாக இவை அகற்றப்படுகின்றனவா என்ற அச்சத்தையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இராணுவத்தினர் போன்று உடை யணிந்தவர்களே போர் எச்சங்களை அகற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று அதனை நேரில் கண்ட மக்கள் 'உதய'னிடம் தெரிவித்தனர்.

பணிகள் மிக வேகமாக மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அப்பகுதியால் செல்லும் மக்கள் இதனை ஒளிப்படம் எடுக்க முற்பட்டால் விரட்டப்படுகின்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

இறுதிப் போரில் கைவிடப்பட்ட பல நூற்றுக் கணக்கான வாகனங்களின் சிதைந்த பகுதிகள் போர் எச்சங்களாக கரையாம்

தொடர்ச்சி: பக்கம் 21

## பறியுங்கள் துப்பாக்கிகளை

### யாழில் தேர்தல் ஆணையாளர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 22
சிவிலியன்களிடமுள்ள அனுமதி பெற்ற துப்பாக்கிகளாயினும் அவற்றைப் பறிமுதல் செய்யுமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து உத்தரவிட்டுள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலிஸார் ஆகியோருடன் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று யாழ். பொது நூலகத்தில் கலந்துரையாடல் நடத்தினார்.

வலி. வடக்கைச் சேர்ந்த இடம்பெயர்ந்த வாக்காளர் வடமராட்சியில் தங்கியுள்ளனர். இவர்கள் வலி. வடக்கு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்குரிய போக்குவரத்து வசதிகளை இலவசமாக மேற்கொள்ளுமாறு அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணை யாள ரிடம் கோரிக்கை விடுத்தன. இதனைத் தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக்கொண்டார்.

யாழ். தீவகப் பகுதிக்குப் பிரசாரத்துக்குச் செல்லும் அரசியல் கட்சிகள் தேவை என்றால் பொலிஸ் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலப் பகுதியில் சிவிலியன்கள் யாரும் அனுமதி பெற்ற துப்பாக்கிகளையும் வைத்திருக்க முடியாது. அவ்வாறு வைத்திருந்தால் அவற்றைப் பறிமுதல் செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்துக் கருணாரட்ணவுக்கு நேற்று

தொடர்ச்சி: பக்கம் 21

## அ.அட்டை விண்ணப்பமுடிவு செப்ரெம்பர் 10 வரை நீடிப்பு

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22
தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டைக்கான விண்ணப்ப முடிவு திகதி அரசியல் கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்கச் செப்ரெம்பர் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்களிப்பின் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் தேர்தல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களைப் பயன்படுத்த வேண்டும்.

தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, அங்கீகரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம், ஆள் பதிவுத் திணைக்களத்

தொடர்ச்சி: பக்கம் 21

## 'சிங்கள குடியேற்றத்தை நிறுத்து' மட்டக்களப்பில் நேற்றுக் கோஷம்

### கூட்டமைப்பின் ஏற்பாட்டில் போராட்டம்

மட்டக்களப்பு, ஓக. 22
மட்டக்களப்பில் அரங்கேற்றப்படும் சிங்களக் குடியேற்றங்கள், காணி அபக ரிப்புக்கு எதிராகத் தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மட்டக்களப்பு பட்டிப்பளை

தொடர்ச்சி: பக்கம் 21




## பேனா மூடியுடன் சபைக்கு வந்த எம்.பி.

கொழும்பு, ஓக. 22
ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் துப்பாக்கி ரவையொன்றைச் சமர்ப்பித்தார் என்று ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே குழப்பம் தோன்றியது. எனினும் பின்னர் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர் சமர்ப்பித்தது துப்பாக்கி ரவை அல்ல. பேனா மூடியே என்று சபாநாயகர் அறிவித்தார்.

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரவையே குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சபையில் சமர்ப்பித்தார் என குழப்பம் ஏற்பட்டது.

எனினும் அவர் சமர்ப்பித்தது பேனா மூடியே என சபாநாயகர் பின்னர் அறிவித்தார். (கு)

## 2 இலங்கை ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க மறுத்தது அமெரிக்கா

### போர்க்குற்றச்சாட்டுக்களே காரணம்

நியூயோர்க், ஓக. 22
போர்க்குற்றங்களுக்குக் காரணமானவர்கள் எனக் கருதி இலங்கை இராணுவத்தின் இரண்டு மூத்த அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கு அமெரிக்கா மறுத்துள்ளது.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மற்றும் இராணுவச் செயலர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோரை நியூசிலாந்தின் ஒக்லாந்தில் நடைபெறவுள்ள இராணுவப் பயிற்சிக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பசுபிக் இராணுவ முகாமைத்து

தொடர்ச்சி: பக்கம் 21

## கேட்பதற்கெல்லாம் பதில் கூறமுடியாது

### தேர்தல் ஆணையாளர் குடாநாட்டில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22
ஊடகவியலாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் என்னால் பதிலளித்துக் கொண்டிருக்க முடியாதென ஊடகவியலாளர் சந்திப்பில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் தேர்தல் வன்முறை, தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கும் அவர் மழுப்பலாகப் பதிலளித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுப் புதன்கிழமை வருகை தந்த

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பின் பரப்புரை 25ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாண, ஓக. 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி வடக்கின் சகல மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளன.
முதலாவது பிரசாரக் கூட்டம் 25ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
தொடர்ந்து 26ஆம் திகதி வவுனியா நகரத்திலும் 27ஆம் திகதி மன்னாரிலும் 28ஆம் திகதி முல்லைத்தீவிலும், செப்ரெம்பர் 2ஆம் திகதி வடமராட்சி புத்தூர் பகுதிகளிலும், 3ஆம் திகதி கோப்பாய், வட்டுக்கோட்டைப் பகுதிகளலும், 4ஆம் திகதி காங்கேசன்துறை, உடுவில் தொகுதிகளிலும், 5ஆம் திகதி கிளிநொச்சி நகரத்திலும் 6ஆம்திகதி மருதங்கேணிப் பகுதியிலும் இந்தப் பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.
தொடர்ந்து 7ஆம் திகதி திக்கம், சாவகச்சேரிப் பகுதிகளிலும், 8ஆம்திகதி வேலணை, நல்லூர்ப் பகுதிகளிலும், 9ஆம் திகதி ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்புப் பகுதிகளிலும், 10ஆம் திகதி துணுக்காய், கனகராயன்குளம் பகுதிகளிலும் 11ஆம் திகதி செட்டிகுளம், நானாட்டான் பகுதிகளிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெறும்.
இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அங்கத்துவ அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
(கு-400- 422-6)

# விசாரணையின்போது பொலிஸார் சித்திரவதையை நிறுத்தவேண்டும்

## ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 22
விசாரணைகளின் போது சித்திரவதையை ஒரு வழி முறைகாகப் பயன்படுத்துவதை இலங்கையில் பொலிஸார் நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கோரியுள்ளது.
இலங்கையில் 1998 ஆம் ஆண்டுமுதல் 2011ஆம் ஆண்டு வரை பொலிஸாரினால் சித்திரவதை செய்யப்பட்ட சுமார் 1500 பேர் தொடர்பான சம்பவங்களை ஆசிய மனித உரிமைகள் ஆணையம் தொகுத்துள்ளது. இதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பி.பி.சி.செய்தி வெளியிட்டுள்ளது.
அதிலும் குறிப்பாக, அதிக சித்திரவதைக்கு உள்ளான 400 பேர் எதிர்கொண்ட பிரச்சினைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
நாட்டில் பொலிஸாரின் சீரமைப்பு குறித்து பொதுமக்களிடையே ஒரு விவாதத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று அந்த ஆணையத்தைச் சேர்ந்த பசில் பெர்ணாண்டோ பி.பி.சி தமிழோசையிடம் கூறியுள்ளார்.
இதற்காக இலங்கை அரசுக்கு உதவச் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் தமது ஆணையம் கோரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
சிறிய குற்றங்கள் தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்கள் கூட, பொலிஸாரினால் தாங்கள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டதாக அந்த ஆணையத்திடம் சாட்சியமளித்துள்ளனர்.
பல ஆண்டுகளுக்கு முன்னர் நடத்தப்பட்ட தாக்குதலின் பாதிப்புக்கள் இன்றளவும் உள்ளன என்று சாட்சியம் அளித்தவர்கள் தெரிவித்துள்ளதாக அந்த ஆணையம் ஆவணப்படுத்தி வெளியிட்டுள்ள புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.
பொலிஸார் , பலரை நிர்வாணமாக்கிக் கொடூரமாகத் தாக்கியதாகவும், அதன் தாக்கம் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தொடர்கிறது எனவும் சாட்சியம் அளித்த பலர் தெரிவித்துள்ளதாகவும் அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.
இப்படியாக சித்திரவதைகளை எதிர்கொண்டவர்களின்கதையை ஆவணப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதாலேயே இதை தாங்கள் முன்னெடுத்ததாகவும் பசில் பெர்ணாண்டோ மேலும் தெரிவித்தார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(கு)

## கூட்டமைப்புக்கு எதிராக யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம்

### ஏமாற்றி அழைத்து வரப்பட்டதாக பொதுமக்கள் கொதிப்பு



யாழ்ப்பாணம், ஓக.22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக யாழ்.நகரில் நேற்றுப் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.
குறித்த எண்ணிக்கையான மக்களும், முன்னாள் போராளிகள் சிலரும் இந்த ஆர்ப் பாட்டத்துக்குப் பலவந்தமாக அழைத்து வரப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
ஈ.பி.டி.பி.யின்வடமராட்சிஅமைப்பாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனால் தாம் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பலவந்தமாக அழைத்துவரப்பட்டதாக அதில் கலந்து கொண்ட மக்கள் சிலர் தெரிவித்தனர். அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து புலனாய்வுப் பிரிவினரால் தாம் அழைத்து வரப்பட்டதாக முன்னாள் போராளிகள் தெரிவித்தனர்.
வடமாகாணத்தில் சமூகத்துடன் இணைக்கப்பட்ட உறுப்பினர்களின் ஒன்றியம் என்ற பெயரில் அமைப்பு ஒன்று இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.
பொலிஸாரின் பூரண ஆதரவுடன் இந்த ஆர்ப்பாட்டம் யாழ். பஸ்நிலையம் முன்பாக நடத்தப்பட்டது.
கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவித்தே ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர் ஸ்ரீரங்கேஸ்வரனால் தாம் பஸ் ஒன்றில் யாழ்.நகருக்கு அழைத்து வரப்பட்டதாக வடமராட்சி மக்கள் தெரிவித்தனர்.
கூட்டமைப்புக்கு எதிரான ஆர்பாட்டத்துக்கே தாம் அழைத்து வரப்பட்டுள்ளனர் என விடயம் தெரியவந்ததுடன் பெரும்பாலான மக்கள் அங்கிருந்து விலகிச் சென்றதைக் காண முடிந்தது.
இதே போன்றே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகளைக் கூட்டம் ஒன்றுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியே புலனாய்வுப் பிரிவினர் தம்மை யாழ்ப்பாணம் கொண்டு வந்தனர் என முன்னாள் போராளிகள் தெரிவித்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூட்டமைப்புக்கு எதிரான சுலோகங்களைத் தாங்கியிருந்தனர்.
(கு-4)

## செய்தியாளரை படம் பிடித்த இவர் யார்?

யாழ்ப்பாணம், ஓக.22
யாழ்.நகரில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை அங்கு வந்திருந்த ஒருவர் படம் பிடிக்க முற்பட்டமையால் அவருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.
கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது என்று கூறிப் பலவந்தமாகத் தாங்கள் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அழைத்து வரப்பட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட



வர்களுடன் நின்றிருந்த நபர் ஒருவர் தனது கைத்தொலைபேசி மூலம் ஊடகவியலாளர்களைப் படம் எடுத்தார். இதனை அவதானித்த ஊடகவியலாளர்கள் அவருடன் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருந்தவர்கள் குறித்த நபரைப் படம் எடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்தினார்கள். இதனையடுத்து அந்த இடத்திலிருந்து அவர் நகர்ந்தார்.
(கு-4)

## இந்திய ஜனாதிபதியை சந்தித்து ரணில் பேச்சு



புதுடில்லி,ஓக 22
இந்தியா சென்றுள்ள எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கும் இடையில் நேற்று முன்தினம் புதுடில்லியில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.
சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின் போது இரு நாட்டு உறவுகளை வலுப்படுத்துவது குறித்துக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
வலயத் தொடர்பு மற்றும் வலயப் பொருளாதாரம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளதாக எதிர்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, அகில இந்திய காங்கிரஸ் குழுவின் செயலாளர் திக் விஜயசிங்கையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
அத்துடன், பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர் யஸ்வந்த் சிங்ஹாவையும் ரணில் சந்தித்துப் பேசியுள்ளார்.
(கு)

## வெலிவேரியவுக்கு சந்திரிகா பயணம்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெலிவேரிய ரத்துபஸ்வலவுக்குச் சென்று அங்கு பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
சுத்தமான தண்ணீர் கேட்டுப் போராட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டமையானது ஜனநாயக நாடொன்றில் இடம்பெறாத ஒன்றாகும் என்றும் அங்கு குழுமியிருந்தவர்களிடம் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் சம்பவத்தில் உயிரிழந்த மூவருக்காகவும் ரத்துபஸ் வலகல்ஒழுவ விஹாரையில் இடம்பெற்ற வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.
(கு)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
Rs.10
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்னாங்காணித் தைலம்
போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியில் 'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு' என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் 'ஒறிஜினல்' என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228 (c/11040)(8.3)
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

# மகேஸ்வரன், ரவிராஜ் போன்று திறமையானவர்களைத் தெரிவு செய்க

## ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் துவாரகேஸ்வரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 22

நடைபெறப் போகும் வட மாகாண சபைத் தேர்தலில் மகேஸ்வரன், ரவிராஜ் போன்று தமிழ் மக்களுக்குச் சிறந்த சேவையாற்றக்கூடியவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளரும், முதன்மை வேட்பாளரு மான தியாகராஜா துவாரகேஸ்வரன்.




அடுத்த மாதம் இடம்பெறப் போகும் வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அப்போது தேசியத் தலைவராலும், தமிழ் மக்களாலும் தேசத் துரோகிகள் என வர்ணிக்கப் பட்ட பலர் இன்று கூட்டுக்குள் இடம்பிடித்துள்ளனர். இவர்களால் தமிழ் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துள்ளனர்.

மேலும் ஒரு கட்சியின் செயலாளர் நாயகம் ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்திப் போரிட்டவர். ஆனால் இன்று ஆட்சித் தலைமைக்கு முண்டு கொடுத்து வருகின்றனர். இவர்களால் தமிழ் மக்கள் எந்தவிதமான நன்மைகளையும் அனுபவிக்கப் போவதில்லை. மாறாகத் துன்பங்களே தொடரும்.

எனவே தன்மானத் தமிழர்களான தியாகராஜா மகேஸ்வரன், நடராஜா ரவிராஜ் போன்றவர்களையொத்த 36 மாகாண சபை உறுப்பினர்களை எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்- இதனால் ஜனநாயக வழியிலே தமிழீழம் மலர்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

ஆனால் சிலரின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி மக்கள் வாக்களிப்பார்களாயின் மேன் மேலும் துன்பங்களையே அவர்கள் அனுபவிப்பர் என்பதில் ஐயமில்லை எனவும் அந்த அறிக்கையில் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# தமது இறுதிச் சந்தர்ப்பத்தை தமிழர்கள் தவறவிடக்கூடாது

## தேர்தல் தொடர்பாக ஆனந்தசங்கரி கருத்து

அக்கராயன்.ஓக. 22

தமிழர்கள் தமது நிலைப்பாட்டை அரசுக்கும் வெளி உலகுக்கும் வெளிப்படுத்துவதற்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பமான வடமாகாண சபைத் தேர்தலை தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும் தமிழர் விடுதலை கூட்டணித் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.



வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலின் முக்கியத்துவம் தொடர்பாகப் பலருக்கும் விளங்கவில்லை. தமிழர்களுக்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் இதுவென்று கூற முடியும்.

தமிழர்களின் நிலைப்பாட்டை வெளியுலகுக்கும் அரசுக்கும் வெளிப்படுத்துவதற்கு இந்தத் தேர்தலை தமிழர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசு தமிழ் மக்களுக்கு பல விடயங்களில் பாதகமாக நடந்து கொள்கிறது. கிளிநொச்சி நகரின் பரவிப்பாஞ்சான் கிராமத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக மக்கள் குடியமர்த்தப் படாத நிலையே காணப்படுகின்றது.

இந்தக் காணி மற்றும் வீடுகளின் உரிமையாளர்கள் தமது உடைமைகளை மறக்கக்கூடிய நிலையை அரசு உருவாக்கியுள்ளது.

நாடாளுமன்றத்தின் ஊடாகச் செய்ய முடியாததை வட மாகாண சபையால் மேற்கொள்ள முடியும் என்று நம்புகிறேன். மாகாண சபை, அதிகாரம் இல்லாத சபையாக இருந்தாலும்கூட அந்தச் சபையின் வேறொரு சக்தி தொடர்பாகப் பலரும் உணராமலே உள்ளனர். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும், சிந்தித்துச் செயற்பட வேண்டும்- எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# யாழில் தீவிரமடையும் பிரசார சுவரொட்டிகள்

வடமாகாண சபைத் தேர்தலில் ஆளும்கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களின் படங்களைத் தாங்கிய ஆதரவு கோரும் தேர்தல் சுவரொட்டிகள் யாழ். ஏ-9 வீதியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்பாகவுள்ள மதிலிலும், சென் பற்றிக்ஸ் வீதியில் யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயச் சுவரிலும் ஒட்டப்பட்டுள்ளன. (வ-51)




யாழ்.ஏ-9 வீதியிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க மதிலில்




யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய சுவரில்...




# மாகாண சபையை கைப்பற்ற வேண்டியது காலச் சூழல் என்கிறார் வினோ எம்.பி.

வவுனியா, ஓக.22

தமிழ் மக்கள் சிந்திய குருதிக்கும் செய்த உயிர்த்தியாகங்களுக்கும் மாகாண சபை ஒரு தீர்வாக அமையமாட்டாது. ஆனால் காலச் சூழல் வட மாகாண சபையினைப் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயத்துக்குள் தமிழ் மக்களைத் தள்ளியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகராத லிங்கம். செட்டிகுளத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களுடனான சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோரத்தனமான போரை நடத்தி ஆயுத பலத்தை ஒடுக்கியது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் அரசியல் போர் செய்து வெற்றி பெறலாம் என அரசு கனவு காண்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் பலத்தை அழித்தொழித்து அடிமைச் சாசனம் எழுத நினைக்கும் அரசுக்கு தமிழ் மக்கள் வாக்குப் பலத்தால் பதில் அளிக்க வேண்டும்.

> வடமாகாண சபை தமிழ் மக்களால் ஆளப்பட வேண்டிய சபை. மாகாண சபையின் அதிகாரங்களை தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்ட மூலமாக இலங்கை அரசமைப்புக்குள்கொண்டுவரப்பட்ட மாகாண சபைகளையோ அதற்குரிய அதிகாரங்களையோ நினைத்தவுடன் மாற்றவோ, அகற்றவோ இந்த அரசினால் முடியாது.



இதற்கு இந்தியாவும் ஒரு போதும் அனுமதிக்காது. அந்த உத்தரவாதம் இந்தியாவால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்திய அரசின் அனுமதியின்றி ஒரு சொல்லையேனும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றமுடியாது. இது மஹிந்த அரசுக்குத் தெரியும். இருந்தாலும் தெற்கில் சிங்கள கடும்போக்காளர்களைத் திருப்திப்படுத்தவென காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கமாட்டேன் என ஜனாதிபதி தெற்கிலே, உறுதியளித்துள்ளார். அரசமைப்புக்கு எதிராக நாட்டின் ஜனாதிபதிகூட கருத்துக் கூற முடியாது. அரசமைப்பில் அதற்கு இடம் கிடையாது.

வடமாகாண சபை தமிழ் மக்களால் ஆளப்பட வேண்டிய சபை. மாகாண சபையின் அதிகாரங்களை தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மட்டுமே பெற்றுக் கொடுக்க முடியும். எனவே கூட்டமைப்பை பலப்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட வேட்பாளர்களான செந்தில்நாதன் மயூரன் மற்றும் ரவி உட்பட பலரும் கலந்து கொண்டனர். (க-400)

# போலித் தேசியம் பேசுபவர்களால் உருப்படியாக எதுவுமே இயலாது

## கூறுகிறார் கிளிநொச்சி அரச தரப்பு வேட்பாளர் தவநாதன்

அக்கராயன், ஓக.22

போலித் தேசியம் பேசுபவர்களினால் மக்களுக்கு உருப்படியான பணிகளை மேற்கொள்ள முடியாது என்று தெரிவித்தார் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும் வை.தவநாதன்.

கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூரில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்வின் பின்னர் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாக்குப் பலத்தினால் எமது கட்சி சார்பாக 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அன்றிலிருந்து அதிக பணிகளை இந்த மாவட்டத்தில் மேற்கொண்டு வருகின்றோம். எமது பணியூடாக கிளிநொச்சி மாவட்டம் கல்வியில் அபிவிருத்தி கண்டுள்ளது.

மாகாண சபை கைப்பற்றப்பட்ட மறுநாளிலிருந்தே பணிகளைத் தொடங்கும் வகையில் எம்மிடம் திட்டங்கள் உள்ளன.



ஆனால் தேசியம் பேசும் கட்சியினர் ஆட்சியைப் பிடித்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை கட்சியாகப் பதிவு செய்வதைப் போன்ற இழுபறிதரன் மிஞ்சும் - என்றார். (க-18)

# கேள்வி அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை

**ஒப்பந்த இல: NaPS/2013/01 – திருநெல்வேலி சந்தை முடிவுறுத்தல் வேலைகள் - கட்டம் I**
**ஒப்பந்த இல: NaPS/2013/02 – கொக்குவில் நூலகம் முடிவுறுத்தல் வேலைகள் - கட்டம் I**
**ஒப்பந்த இல: NaPS/2013/03 – கோண்டாவில் ஆயுர்வேத சிகிச்சை மையம் நிர்மாணம்**

01. தலைவர், நல்லூர் பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டட நிர்மாண வேலைகளுக்கு கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், தவிசாளர்/ செயலாளர், நல்லூர் பிரதேச சபை, நல்லூர், Te. No 0212222700 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 16-09-2013 ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவிலில் 23-08-2013 ம் திகதியிலிருந்து 16-09-2013 வரை காலை 09.00 மணிக்கும் 16.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ருபா.2,000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் எனும் முகவரிக்கு 16-09-2013ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதி திகதியிலிருந்து 77 (எழுபத்து ஏழு – 02-12-2013) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.)Min | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NaPS/2013/01 | திருநெல்வேலி சந்தை முடிவுறுத்தல் வேலைகள் - கட்டம் I | 7.13 | 4 மாதங்கள் | C7 அல்லது அதற்கு மேல் | 70,000.00 | 30-12-2013 |
| NaPS/2013/01 | கொக்குவில் நூலகம் முடிவுறுத்தல் வேலைகள் - கட்டம் I | 4.96 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் | 50,000.00 | 30-12-2013 |
| NaPS/2013/01 | கோண்டாவில் ஆயுர்வேத சிகிச்சை மையம் நிர்மாணம் | 3.93 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் | 40,000.00 | 30-12-2013 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் நல்லூர் பிரதேச சபை, கொக்குவில், தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் 05-09-2013 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ளமுடியும்.

**திரு. ப. வசந்தகுமார்**
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை,
நல்லூர்.
21-08-2013

(C/11456)(6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

முழங்காவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் உருக்கிய தங்கக் கட்டிகள் 2, மோதிரம் 1 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
213 D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 0772827207

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல காகிதாதி நிறுவனம் ஒன்றுக்கு விற்பனையாளர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உடன் தொடர்புகளுக்கு
078 700 5674

## வேலை வாய்ப்புக்கள்

இளம் ஆண், பெண்களுக்கு
Secretary
Receptionist
Room Service
Servant Girl
Cook

*கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம்.*

New Hotal Blue Ocean
அல்லைப்பிட்டி 0778350478

தேர்தல் பிரசாரத்திற்கு உங்கள் கட்சியின் பெயர் பொறித்த ரீ சேட், தொப்பி, பான்ட், பச், கீரெக், புளோரசெண்ட் போஸ்டர், கட்அவுட், பனர், பிரசார விளம்பரப்பலகைகள் என உங்கள் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிட அழையுங்கள்



எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
0777 110 610

சிக்கனமான எரிபொருள் பாவனைக்கு...

பஜாஜ்
முச்சக்கர வண்டி



உயர்ந்து செல்லும் எரிபொருள் விலைக்கு ஈடுகொடுப்பதற்கு குறைந்தளவு எரிபொருளுடன் அதிக தூரம் செல்வதற்கான வாகனமே அவசியமாகும். குறைந்த எரிபொருள் செலவுடன் குடும்பத்தவர் அனைவரும் ஒன்றாகப் பயணம் செய்யப் பொருத்தமான வாகனம் புத்தம் புதிய பஜாஜ் முச்சக்கர வண்டியே.

அதுமட்டுமன்றி...
- கைக்கடக்கமான விலை
- எரிபொருள் சிக்கனம்
- குறைந்த பராமரிப்புச் செலவு
- போதியளவு அசல் உதிரிப்பாகங்கள்
- நாடெங்கும் சேவை நிலையங்கள்
- சிறந்த விற்பனைக்குப் பிந்திய சேவை




விலை: ரூ.470,960/-

tradlanka

நிதி, காப்புறுதி சேவையுடன் மற்றைய வசதிகள் மற்றும் ஆலோசனைகளுடன் விற்பனைக்கு பின்னரான சேவைகளுக்கு எங்களை நாடவும்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
பதிவிலக்கம்: PB270
பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

பஜாஜ் முச்சக்கர வண்டி
வாழ்வை வளமாக்கும்
வகையான
குடும்ப வாகனம்.



தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத் தீர்த்தத் திருவிழாவான நேற்று பக்தர்கள் புடைசூழ முருகப் பெருமான் தீர்த்தமாடுகிறார். (வ-34)

# வன்னியில் 30 வீதமான மக்களுக்கே மின்சாரம்

யாழ்ப்பாணம், ஓக.22
வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சுமார் 30 வீதமான மக்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் 90 வீதமான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 10 வீதமானவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

அவ்வாறே வவுனியா மாவட்டத்தில் 83 வீதமானவர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் 60 வீதமான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 32 வீதமானவர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 28 வீதமான மக்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருட இறுதி வரையான புள்ளிவிவரமே இது.

யாழ்.குடாநாட்டுக்கு மின்சாரத்தை சீராக வழங்குவதற்கான மின்சாரத் தொகுதிகள் பலவற்றை அமைத்துள்ளோம். 2011 இலிருந்து தற்போது வரை இதற்கென 450 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இவற்றை முழுவதுமாக அமைப்பதற்கு 800 மில்லியன் ரூபா வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

குடா நாட்டில் சில இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. அவற்றை வழங் குவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்- என்றார் குணதிலக. (கு-4)

## சாவகச்சேரி நகரில் மூடப்பட்ட பொது மண்டபத்தை செயற்பட விடுங்கள்

தென்மராட்சி, ஓக.22
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான மண்டபம் பொது மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படாமல் கடந்த எட்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளது.

பொது மக்களின் பயன்பாட்டுக்கென அமைக்கப்பட்ட மண்டபம் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால் பிரதேச மக்கள் மண்டபத்துக்காக வேறு பிரதேசங்களுக்குச் செல்லும் அவல நிலை நீடித்து வருகிறது.

இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் உடனடியாக மண்டபத்தை செயற்பட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலரைக் கோர வேண்டும் என நகர சபை உறுப்பினர்களால் கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பொது மக்களின் பயன்பாட்டுக்கென அமைக்கப்பட்ட மண்டபம் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் பாதிப்புக்கு உள்ளாவதாக பொது மக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

இதனை மீண்டும் இயங்க வைக்க வேண்டுமென உறுப்பினர் ஒருவரால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆதரித்து அனைத்து உறுப் பினர்களும் மண்டபத்தின் தேவை குறித்து கருத்து தெரிவித்தனர். (வ-9)

## மரியசேவியர் அடிகளாருக்கு மாநகர சபையின் உயர் விருது



யாழ்ப்பாணம், ஓக. 22
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் நல்லைக் கந்தன் ஆலய திருவிழாவையொட்டிய நல்லைக்குமரன் மலர் 21 வெளியீடும், திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் ரீ.மரியசேவியர் அடிகளாருக்கு விருது வழங்கும் நிகழ்வும் நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்டது.

யாழ்.மாநகர ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுத் தலைவருமான எஸ்.பிரணவநாதன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து ஆசியுரை வழங்கினார்.

யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா யாழ்.மாநகர சபையின் உயர் விருதான யாழ். விருதை திருமறைக்கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளாருக்கு வழங்க ஆணையாளர் எஸ். பிரணவநாதன் பொற்கிளியை வழங்கிக் கௌரவித்தார்.

நல்லைக்குமரன் மலர் முதல் பிரதியை மலராசிரியர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான உறுப்பினரிடம் வழங்கினார். மலர் ஆய்வுரையை பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி விஜயலட்சுமி ரகுநாதன் வழங்கினார். நல்லூர் திருவிழாவை முன்னிட்டு சைவசமய விவகாரக் குழு வால் நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (வ-7)

## தென்மராட்சியில் விண்ணப்பித்தோருக்கு அடையாள அட்டைகள் வந்து சேர்ந்தன

தென்மராட்சி, ஓக.22
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் கபே நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை தொடர்பான நடமாடும் சேவைகளில் விண்ணப்பங்கள் வழங்கியோருக்கான அடையாள அட்டைகள் ஆள்பதிவுத் திணைக்களத்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 16,17, 19 ஆகிய திகதிகளில் வரணி, கைதடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளில் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் ஆள்பதிவுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டன.

புதிய மற்றும் தொலைந்த, பழுதடைந்த, பெயர் மாற்றல் போன்ற அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகள் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வரணி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளில் பெறப்பட்ட ஆயிரத்து 27 விண்ணப்பங்கள் ஆட்பதிவுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)



நல்லூர்க் கந்தனின் பத்தாம் திருவிழாவான திருமஞ்சக் காட்சி

## நல்லை நகர் நாயகனே நலமீவாய்

பச்சை மயிலில் பள்ளிகொள்ளும் பாலஸ்கந்தனே
இச்சையுடன் இசை மலர்களால் ஏத்துகிறோம் ஐயா
சங்கரனின் மைந்தனே நாம் பட்டதுயர் போதும் ஐயா
வாட்டும் கொடுவினைகள் போக்கி நலம் அருள்வாய் ஐயா

*செல்லத்துரை பவானி,*
*ஆனைக்கோட்டை*

## தீர்வளிப்பான் திருமுருகன்

நல்லைக்கு நீயோடு நடுங்குமென் நெஞ்சேயுன்
தொல்லைக்குத் தீர்வுதனைத் தந்திடுவான்- தில்லைக்குத்
தலைவனவன் திருமகனாம் திருமுருகன் வேண்டுவதை
நிலையாக நல்கிடுவான் கொண்

*நாயன்மார்கட்டு. ப.மகேந்திரதாசன்*

## கந்தப்பெருமானே காருமையா

குன்றமரும் தமிழ் குமரா
குலம் காக்கும் நல்லூரா-யாழ்
குடா மண்ணாளும் நாயகனே
என்னாளும் எமைக் காருமையா

ஏற்றம் மிகுந்த எம் புலங்கள்
எங்கும் பல மாற்றங்கள்
நாசம் செய்யும் நோக்கங்கள்
நாளும் பெருகுதையா..

பாட்டன் பிறந்த மண்ணையா
பண்பாட்டு தமிழ் ஊரையா
புண்பட்டு போகுதையா
முன்வந்து காருமையா

எம் ஊர் எம் மக்கள்
என்று நாம் வாழ்ந்திடவே
எம்மன இடர் நீங்கி
இனிதே சிறப்புறவே
என்றும் நீ காருமையா.

*தீசா ஞானசந்திரன்...*

நேற்றைய உதயன் இதழின் 5 ஆம் பக்கத்தில் நல்லூர்க் கந்தன் விசேட அம்சப் பகுதியில் பிரசுரமான "நெஞ்சத்தின் ஏக்கத்தை நீக்கு' என்ற கவிதையை எழுதியவர் 'சிற்பி' ஆவார்.



உதயன்
22/08/2013

## பிரதமர் வேட்பாளர் விரைவில் அறிவிப்பு- பா.ஜ.க

புதுடில்லி, ஓக.22
பா.ஜ. பிரதமர் வேட்பாளர் குறித்து விரைவில் தீர்மானிக்கப்படும் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
பா.ஜ.க. பிரதமர்வேட்பாளர்குறித்து விரைவில் முடிவு செய்யப்படும். பிரதமராக அனைத்து தகுதிகளும் மோடிக்கு உள்ளன.
நாட்டின் பொருளாதார நிலை வேதனை அளிக்கிறது. இந்திய பொருளாதாரம் மிக மோசமாக நிலையில் உள்ளது. இதற்கு அரசின்தவறானநிர்வாகமேகாரணம்.
நிலக்கரி ஒதுக்கீடு தொடர்பான ஏராளமான ஆவணங்கள் மாயமாகிஉள்ளன. இதனால்ஊழலை மூடி மறைக்க பார்க்கின்றனர்; இதற்கு காரணமான பலர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிலக்கரி சுரங்கம் தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களையும் அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும் " என்று தெரிவித்தார். (ற)

# இனியும் நட்பு நாடா இலங்கை?

## ஞானதேசிகனின் உபதேசம் தேவையில்லை என்கிறார் கருணாநிதி

சென்னை, ஓக.22
இனியும் இலங்கையை எவ்வாறு நட்பு நாடாகக் கருத முடியும் என்று காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.
இலங்கையை எதிரி நாடாகக் கருதினால் தமிழர் பிரச்சினை குறித்து யாரிடம் பேசுவது என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளமை தொடர்பாகக் கருத்துக் கூறும்போதே கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"இலங்கையை எதிரிநாடாகக் கருதினால் தமிழர்கள் பிரச்சினை குறித்து யாரிடம் பேசுவது என்று ஞானதேசிகன் வேதாந்தம் பேசியிருக்கிறார். எதிரிநாடுகளிடம் தான் பிரச்சினை பற்றிப் பேச நேரிடும். ஞானதேசிகனைப் போன்றவர்கள் இப்படி விதண்டாவாதம் பேசுவதால்தான் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியாவிற்குள் இருந்து கொண்டே கச்சதீவை ஒப்படைக்க முடியாது என்று தோள் தட்டிச் சூளுரைக்கிறார்.
மத்திய அமைச்சர்கள் ஜி.கே. வாசன் இலங்கை அமைச்சரின் பேச்சு கண்டிக்கத்தக்கது என்று கூறியிருக்கிறார். அமைச்சர் நாராயணசாமி இலங்கை மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து, தமிழர்களின் உணர்வுகளை மதிக்கும் வகையில் பிரதமர் நல்ல முடிவு எடுப்பார் என்று கூறுகிறார். ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன்தான் இலங்கையை நட்பு நாடாகக் கருத வேண்டும் என்று ஞானோபதேசம் செய்கிறார். இனியும் இலங்கையை நட்பு நாடாக எவ்வாறு கருதமுடியும்." என்று தெரிவித்தார்.
தற்போது பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ள 'மெட்ராஸ் கபே' திரைப்படம் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோது,
"அந்தத் திரைப்படத்தை நான் பார்க்கவில்லை. ஈழத் தமிழ்ப் போராளிகளை அவமதிக்கும் வகையில் இந்தத் திரைப்படம் தயாரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் தகவல் உண்மையா என்பதை தமிழக அரசு கண்காணித்து உரிய நடவடிக்கை எடுப்பது தான் முறையாக இருக்கும்" என்று தெரிவித்தார். (ற)



**ஞானதேசிகனைப் போன்றவர்கள் இப்படி விதண்டாவாதம் பேசுவதால்தான் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியாவுக்குள் இருந்து கொண்டே கச்சதீவை ஒப்படைக்க முடியாது என்று தோள் தட்டிச் சூளுரைக்கிறார்.**

## உளவு அமைப்புகளை பாதுகாக்க சிறப்புப் படை

புதுடில்லி, ஓக.22
இந்திய மத்திய உளவு அமைப்பான றோ மற்றும் கடற்படை ஆய்வு மையங்களைப் பாதுகாக்க ஆயிரத்து 800 வீரர்களைக் கொண்ட சிறப்பு அதிரடிப் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
மத்திய உளவு அமைப்புகளான றோ, ஐபி மற்றும் கடற்படை ஆய்வு மையத்தின் கிளைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன. அவற்றில் உளவு பார்ப்பதற்கும், ஆய்வு மேற்கொள்வதற்கும் தேவையான பல்வேறு நவீன சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு தீவிரவாத அச்சுறுத்தல் உள்ளதை அடுத்து அவற்றின் பாதுகாப்பு அம்சங்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
அதன் அடிப்படையில் நாடு முழுவதும் உள்ள அவற்றின் அலுவலகங்களின் பாதுகாப்புப் பணிகளுக்கு ஆயிரத்து 800 வீரர்களைக் கொண்ட சிறப்பு அதிரடிப் படை உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

**கண்ணீர் அஞ்சலி**

எமது மன்ற உறுப்பினர்களான
இ.தெய்வேந்திரம் (இந்திரன் ஜுவலர்ஸ், சாவகச்சேரி)
இ.நாகேந்திரன் (முருகன் ஜுவலர்ஸ், சாவகச்சேரி)
இ.இராகவன் (அம்மன் ஜுவலர்ஸ், சாவகச்சேரி)
ஆகியோரின் பாசமிகு தாயார்
திருமதி **இராசம்மா இராசையா**
அவர்கள் 21.08.2013இல் காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.
(சி 2737)(12,3,6) **சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## போலி காசோலையை கொடுத்து ஏமாற்றிய சோனியா மருமகன்

புதுடில்லி, ஓக.22
காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியின் மருமகனும், பிரியங்கா காந்தியின் கணருவமான ராபேர்ட் வதேரா, நிலம் வாங்க போலி காசோலைகள் கொடுத்துள்ளமை தற்போது அம்பலமாகி உள்ளது.
அரியானாவில் போலி ஆவணங்கள் மூலம் நிலம் வாங்கியதாக சோனியா காந்தியின் மருமகன் ராபேர்ட் வதேரா மீது, ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக் கெம்கா புகார் தெரிவித்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
இந்தநிலையில், ஓம்கரேஷ்வர் பிராப்பர்டிஸ் நிறுவனத்திடம்இருந்து ராபேர்ட் வதேரா, போலி காசோலைகள் மூலம் நிலம் வாங்கியது தற்போது அம்பலமாகியுள்ளது.
ராபேர்ட் வதேராவின் ஸ்கைலைட் ஹாஸ்பிடாலிட்டி நிறுவனம் 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வாங்கிய நிலத் திற்கு பணம் ஏதும் வழங்கவில்லை. வங்கி மூலம் காசோலை ஒன்று கொடுக்கப்பட் டுள்ளது.
ஓம்கரேஷ்வர் பிராப்பர்டிஸ் நிறுவனத்திற்கு தர வேண்டிய ரூ.7.5 கோடி தரப்படாததால் அந்நிறுவனம் நெருக்கடி கொடுத்துள்ளது.
இதையடுத்து, டெல்லியைச் சேர்ந்த கோ ஆப்பரேட்டிவ் வங்கி மூலம் காசாலை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.
இதனை விசாரித்த போது அந்த வங்கியில், ஸ்கைலைட் ஹாஸ்பிடாலிட்டி நிறுவனத்திற்கு எந்த வங்கி கணக்கும் இல்லை என தெரியவந்துள்ளது. அதையடுத்து இந்தப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. (ற)



'ஜெ' சொத்து வழக்கு:

## தி.மு.கவின் மனு ஏற்பு

சென்னை, ஓக.22
தமிழக முதல்வர் ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தார் என்று தொடரப்பட்ட வழக்கில் அரசு தரப்பு சட்டத்தரணிக்கு உதவியாக தி.மு.க. சட்டத்தரணியைச் சேர்க்கக்கோரிதாக்கல்செய்யப்பட்டமனு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
சொத்து குவிப்பு வழக்கின் அரசு தரப்பு வழக்குரைஞர் அண்மையில் மாற்றப்பட்டதால், அவருக்கு வழக்கின் முந்தைய தன்மைகளை எடுத்துக் கூற உதவியாக தி.மு.க. வழக்குரைஞரை சேர்த்துக் கொள்ளுமாறு தி.மு.க. சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ற)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**மரண அறிவித்தல்**

திருமதி **இராசையா இராசம்மா**

சங்கத்தானை, தட்டாதெரு, மீனாட்சி அம்மன் கோயில் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசையா இராசம்மா நேற்று (21.08.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அன்னலட்சுமி (ஜேர்மனி), காலஞ்சென்ற தர்மதுரை மற்றும் ஜெகசோதி, மங்கையர்க்கரசி, இராஜகோபால், இராஜபூபதி, தெய்வேந்திரன் (இந்திரன் ஜுவல்லஸ்), தேவகி, இரத்திரனகோபால், திருநாவுக்கரசு (ஜேர்மனி), நாகேந்திரன், இரத்தினபூபதி, இராகவன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற திருஞானசுந்தரம் மற்றும் யோகாம்பாள் (கனடா), தர்மலிங்கம், விவேகானந்தம், தனலட்சுமி, கனகராஜா, செல்வராணி, பாலச்சந்திரன், காலஞ்சென்ற சறோஜாதேவி மற்றும் தனலட்சுமி (பவாச்சி - ஜேர்மனி), றஜனி, சின்னராஜா, சிறிரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
தட்டாதெரு, சங்கத்தானை,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(சி 2739) (12, 3,6)

**மரண அறிவித்தல்**



**சோதிப்பரமானந்தர் சிவகுமார்**
**(குஞ்சன் / Sam Ananthar)**

நெடியகாடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிப்பரமானந்தர் சிவகுமார் நேற்றுமுன்தினம் (20.08.2013) யாழ்ப்பாணத் தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் நெடியகாடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரத்தினவடிவேல் சோதிப்பரமானந்தர் (Retired OA at Education Department, Jaffna) - காலஞ்சென்ற சரோஜினிதேவி (சின்னக்கிளி) தம்பதியரின் புதல்வரும், ஜெயச்சந்திரன்-ஸ்ரீகஜாமணி தம்பதியரின் மருமகனும், ஜெயவாணி அவர்களின் அன்புக் கணவரும், சஜீனா அவர்களின் அன்பு தகப்பனாரும், கனடாவில் வசிக்கும் திருநாவுக்கரசு(ராசு), புஸ்பலதா, இரத்தினவடிவேல் (கண்ணன்), உமாசங்கர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாலசுப்ரமணியம் (பாலா), சாந்தாமணி, காலஞ் சென்ற கமலாதேவி, கந்தசாமி, சீவரெட்சகம் ஆகியோரின் மருமகனும், சுசீலா, ஸ்ரீபார்வதி, கல்யாணி, ஜெயகௌரி, ஜெயமதி, ஜெயப்ரகாஷ் ஆகியோரின் மைத்துனரும், மயூரி, ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஸ்வின், திவ்யா, ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், பிரவீனா, அகிலன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் ஊரணி வல்வெட்டித்துறை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
திரு - (இலங்கை- +94729146289), சங்கர் - (இலங்கை - +94774594909),
வாணி - (இலங்கை - +94774396097), சோதிப்பரமானந்தர் - (கனடா - +14163354049),
ஜெயச்சந்திரன் - (கனடா - +19054251844), புஷ்பா - (கனடா - +19056409896),
கண்ணன் - (கனடா - +14163007770), பாலு மாமா - (கனடா - +16472803719)

**நெடியகாடு,
வல்வெட்டித்துறை.**

(C/11454)(7.6.3)

**தகவல்:
குடும்பத்தினர்.**

## கால் மூட்டுக்குள் வளர்ந்த நத்தை

நியூயோர்க், ஒக.22
சிறுவன் ஒருவனின் கால் மூட்டுக்குள் வளர்ந்த கடல் நத்தை தற்போது வெளியே எடுக்கப்பட்டு, மீன் தொட்டியில் வளர்க்கப்படுகிறது. இந்தச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.
அமெரிக்காவின், கலிபோர்னியா மாகாணத்தின், ஆரஞ்ச் கவுன்டி பகுதியை சேர்ந்தவன் 4 வயதுடைய போல் பிராங்ளின். கடந்த மாதம் வீட்டருகே உள்ள புல்வெளியில் பிராங்ளின் விளையாடியபோது, கீழே விழுந்து கால் மூட்டில் காயம் ஏற்பட்டது.
ஒருமாதத்தின் பின்னரும் அந்தக் காயம் மாறாததை அடுத்து மருத்துமனையில் சேர்க்கப்பட்டான் பிராங்ளின். அங்கு காயத்தைச் சுத்தம் செய்தபோது சிறிய நத்தை ஒன்று அதற்குள் இருந்து வெளியே வந்தது.
புல்வெளியில் கிடந்த நத்தையின் முட்டை சிறுவனின் காலில் ஏற்பட்ட காயத்தின் வழியாக உள் சென்று நத்தையாகி வளர்ந்து வெளிவந்துள்ளது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.
தற்போது அந்த நத்தை பிராங்ளினின் வீட்டில் மீன் தொட்டியில் வளர்கின்றதாம்.(ற)



சீனாவைத் தாக்கிய உடார் புயலால் தென் சீன பகுதியில் உள்ள குவான்டாங் மாகாணத்தில் 20 பேர் உயிரிழந்தனர், 7 பேர் காயமடைந்தனர். இதனிடையே குவான்க்சி மாகாணத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த ஆண்டு சீனாவில் ஏற்பட்ட 11-ஆவது சக்திவாய்ந்த புயலாக இது கூறப்படுகிறது. ஆறுகளில் வெள்ளநீர் ஓடுவதால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

## ஆற்றில் பாய்ந்தது பஸ்

### இந்தோனேசியாவில் 18 பேர் சாவு

ஜகாத்தா, ஒக.22
இந்தோனேசியாவில் பஸ் ஒன்று ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்தனர், 40 பேர் காயமடைந்தனர்.
ஜகாத்தாவில் உள்ள தேவாலயத்தைச் சேர்ந்த 60 பேரை சுற்றுலா அழைத்துச் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த பஸ்ஸே கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் இருந்த ஆற்றில் விழுந்தது. அதில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், 40 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ற)


# அதிவேக ரயில்களே அல் குவைதா இலக்கு

## எச்சரிக்கிறது அமெரிக்க உளவுத்துறை

வொஷிங்டன், ஒக.22
அதிவேக ரயில்களைத் தாக்குதவதற்கு அல்-குவைதா அமைப்புத் திட்டமிட்டு வருகின்றது என்று ஐரோப்பிய நாடுகளை எச்சரித்துள்ளது அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவகம்.
இதுகுறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையில்,
"இம்மாத ஆரம்பத்தில் அல் - குவைதா அமைப்பின் தலைவர் அய்மான் அல் - ஜவாகிரி மற்றும் 20 உயர்மட்டத் தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அதன்போது ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் அதிவேக ரயில்கள் மற்றும் அவை இயங்கும் குகைப் பாதைகள், தண்டவாளங்கள், மின்சாரக் கேபிள்கள் என்பவற்றில் தாக்குதல் நடத்துவது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்க தேசிய புாதுகாப்பு நிறுவகத்தின் இந்த எச்சரிக்கையை அடுத்து, ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.
உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரித்துள்ள ஜேர்மனி, ரயில் வழித்தடங்கள் எங்கும் சாதாரண உடைகளில் பொலிஸார் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.
கடந்த முதலாம் திகதி மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் உள்ள தூதரங்களைத் தாக்க அல் -குவைதா அமைப்புத் திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவகம் விடுத்த எச்சரிக்கையை அடுத்து பல முஸ்லிம் நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரங்கள் மூடப்பட்டன.(ற)

## தொடர்ந்து மிரட்டும் புகுஷிமா அணு உலை

டோக்கியோ, ஒக.22
ஜப்பானில் உள்ள புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீரில் ஆபத்தை விளைவிக்கக் கூடிய அளவு அணுக்கதிர் வீச்சுக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.



2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் புகுஷிமா அணு உலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தற்போதும் பாதிப்புகளை சீர்செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனினும் அவ்வப்போது கதிர் வீச்சுடன் கூடிய கழிவு நீர் வெளியேறி அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.
கழிவு நீரைச் சேமித்து வைப்பதற்காகக் கட்டப்பட்டுள்ள நீர்த் தொட்டிகளில் ஏதோ ஒன்றில் இருந்து கழிவு நீர் கசிவது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கசியும் நீரில் ஆபத்தை விளைவிக்கக் கூடிய அளவு அணுக் கதிர் வீச்சுக் காணப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.
இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள புகுஷிமா அணு உலையை நிர்வகிக்கும் எலக்ட்ரிக் பவர் நிறுவன செய்தித் தொடர்பாளர் மசாயுகி ஒனோ, "கழிவு நீரில் அணுக் கதிர் வீச்சுக் காணப்படுகின்றது. எனினும் எந்த தொட்டியிலிருந்து கழிவுநீர் கசிந்தது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. கசிந்து வந்த நீரை மீண்டும் தொட்டிகளுக்கு அனுப்பும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்" என்று தெரிவித்தார்.(ற)

## பேச்சு மூலம் பிரச்சினையை தீருங்கள்

### இந்தியா - பாகிஸ்தானை வலியுறுத்துகிறது அமெ.

நியூயோர்க், ஒக.22
பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையே உள்ள எல்லைப் பிரச்சினையை அந்த நாடுகள் பேச்சுக்கள் நடத்தி தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.
இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்காவின் வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ஜென் பாஷ்கி வா, "இந்தியாவும் பாகிஸ்தானும் தமது பிரச்சினையை பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதைத்தான் அமெரிக்கா விரும்புகின்றது. அதில் எந்தவித மாற்றமும் இல்லை. பேச்சுக்கள் நடத்தும் நாள் மற்றும் இடத்தை அந்த இரு நாடுகளுமே முடிவு செய்ய வேண்டும். பேச்சுக்கள் நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு அமைதி திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் உயிரிழப்பு

ஜெருசலேம், ஒக.22
மேற்குக் கரையின் வட பிராந்தியத்தில் இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களில் பலஸ்தீனப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கிளர்ச்சியாளர்கள் சிலரை கைதுசெய்ய முயன்ற இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுவதுடன், அந்தச் சம்பவத்தின் போது 2 பலஸ்தீனியர்களும் 2 இரா




ணுவத்தினரும் காயமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.
எனினும் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்தே, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று இஸ்ரேலின் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில், நீண்ட இடைவேளையின் பின்னர், சமாதானப் பேச்சுகள் இடம்பெறும் நிலையில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை அடுத்து பலஸ்தீனப் பகுதிகளில் கொந்தளிப்பான நிலை காணப்படுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ற)

## பாகிஸ்தான் பொலிஸாரிடம் சிக்கிய வெடிகுண்டு மூலப் பொருள்கள்

இஸ்லாமாபாத், ஒக.22
வெடிகுண்டுகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சுமார் 100 தொன் மூலப்பொருள்கள் பாகிஸ்தான் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தொழிற்சாலையொன்றில் குண்டுகள் தயாரிப்பதற்கான இரசாயன பொருள்கள் உள்ளிட்ட மூலப் பொருள்கள் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், இது தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பிரிட்டனில் ஒரு 'கஜினி': தாய் தந்தையரையே மறக்கிறார்

லண்டன், ஒக.22
இரவு தூங்கி எழுந்ததும் முதல் நாள் என்ன நடந்தது என்ற விவரங்கள் அனைத்தும் ஞாபகத்தில் இருந்து அழிந்துபோகும் விநோத நோயால் அவதிப்பட்டு வருகின்றார் பிரிட்டனைச் சேர்ந்த இளைஞர் ஒருவர். அதனால் ஒவ்வொரு நாள் காலையும் அவரது பெற்றோர்கள் தம்மை அவருக்கு அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர்.
பிரிட்டனில் பிரிஸ்டல் பகுதியைச் சேர்ந்தவர் 19 வயதுடைய ரிக்கி டீன். அவர்தான் இந்த விநோத நோயால் பதிக்கப்பட்டுள்ள 'லண்டன் கஜினி'.
டீனுக்கு மூன்று வயதாகும் மட்டும் அவரிடம் காணப்பட்ட ஞாபக மறதிக் குறைபாடு அவரது பெற்றோருக்குத் தெரியவில்லை. ஏழாவது வயதில் அதிகப்படியான நிகழ்வுகளை டீன் மறந்து போவதைக் கண்டு, பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். அதன் பின்னரே மருத்து உதவியை நாடினார்கள்.
டீனைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவரின் மூளைக்குச் செல்லும் ஒக்ஸிஜனின் அளவு குறைந்துள்ளதைக் கண்டுபிடித்தார்கள். அதற்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோதும் டீனின் ஞாபகமறதியில் எந்த முன்னேற்றமும் இல்லை. மாறாக நாளுக்கு நாள் ஞாபகமறதி கூடிக்கொண்டே போனது.
நாளடைவில் அவரது பெற்றோர் தங்களை ஒவ்வொரு நாளும் அறிமுகம் செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டு, 'கஜினி' திரைப்பட சூர்யாவைப்



போல் மாறிவிட்டார் டீன். தற்போது டீன் 'ஐ-போன்' உதவியுடன் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார். அதில் நண்பர்கள், ஆசிரியர்கள், அக்கம் பக்கத்தினர் மற்றும் பெற்றோரின் புகைப் படங்களை பதிவு செய்து, அதன் மூலம் அனைவரையும் அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்துள்ளனர் அவரின் பெற்றோர்.
பல் துலக்குவது, குளிப்பது போன்ற அன்றாட வேலைகளும்கூட அவருக்கு கவனத்தில் இல்லை. இது போன்ற தினசரி நடவடிக்கைகளுக்கும், டீன் தன் 'ஐ-போனின்' உதவியையே நாடுகிறார்.
தற்போது 19 வயதாகும் டீன், இவ்வளவு பெரிய குறைபாட்டையும் பொருட்படுத்தாமல், தோட்டக்கலை மற்றும் விவசாயம் சம்பந்தப்பட்ட பட்டப் படிப்பை படித்து வருகிறார்.
இதுகுறித்துக் கூறும் டீன், " நேற்று நடந்த விடயங்களையோ அல்லது நாளை என்ன செய்ய வேண்டும் என்ற திட்டத்தையோ என்னால் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது.
மறதி எனக்கு பல வகைகளில் நன்மை அளிக்கிறது. இதனால் யாரிடமும் நான் பகைத்துக் கொள்ளும் சூழல் ஏற்படுவதில்லை. நான் சந்தோஷமாக இருக்கிறேன். சாதாரண மனிதர்களைப் போல், பழைய நினைவுகளால் கவலைப்படுவதோ, நாளை பற்றிய திட்டமிடுதலால் ஏற்படும் மன உளைச்சலோ எனக்கு கிடையாது. இந்த நோயை நான் சாபமாக கருதவில்லை; வரமாக நினைக்கிறேன்" என்று கூறுகின்றார். (ற)

## காணி விற்பனைக்கு

யாழ். பிரதான வீதிக்கு அருகில்
4ஆம் குறுக்குத் தெருவில் 1½ பரப்பு
கட்டடக் காணி விற்பனைக்குண்டு,
விலை 70 இலட்சம்.

T.P: 077 634 0324, 077 623 1563
(31420)(7.3)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்
படவுள்ள BAIRAHA Chickan
கடைக்கு அனுபவமுள்ள ஆண், பெண்
வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 734 8883

## விற்பனைக்கு

எமது மரக்காலையில் அனுமதிப் பத்திரம் உடைய வேம்பு, முதிரை மரங்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 666 0492 (39049)(7.6.3)

## வேலை ஆள்கள் தேவை (Marketing)

18 வயதில் இருந்து 35 வயது வரை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 284 5667 (39048)(7.6.3)

## விற்பனைக்குண்டு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட லேத் மிசின் மற்றும் சீன
நாட்டு லான்ட் மாஸ்ரர் என்பன
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 514 2011
(39057)(11.3.6)

## தவறிவிட்டது

திறப்புக்கோர்வை அடங்கிய சிறிய பாக் ஒன்று கடந்த 19.08.2013 சாவகச்சேரிக்கும் மிருசுவிலுக்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
* சன்மானம் வழங்கப்படும்.

TP : 077 990 0077 (39052)(11.3.6)

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு
அருகில் ஒரு பரப்பு 15.50 குளி விஸ்தீரணம்
கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன்
கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 711 1400
(31012)(3.6.11)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி வறுத்தலை
வீதியில் நிலப்பரப்பு 10
விஸ்தீரணமுடைய
காணி ஒன்று
விற்பனைக்குண்டு.

தொடர்பு: R. கணேசன்
077 376 8457 (39054)(7.6.3)

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் போதியளவு வாகனத்
தரிப்பிடமும் தளபாடங்களுடன் முற்றிலும்
Tiles பதிக்கப்பட்ட வீடு மாத, கிழமை,
நாள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 868 8102
(39055)(11.3.6)

# PATRICIAN INSTITUTES

## பற்றிஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

### புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் : 29.08.2013**

**1. COMPUTER COURSES (கணினி பயிற்சிநெறி)**

| | |
|---|---|
| A. Advanced in Computer programming | Duration 8 Months |
| B. Diploma in Microsoft Office | Duration 4 Months |
| C. Diploma in Desk Top Publishing | Duration 4 Months |
| D. Diploma in Video Editing | Duration 4 Months |
| E. Diploma in Type Setting | Duration 3 Months |
| F. Diploma in Computerized Accounting | Duration 4 Months |
| G. Diploma in Software Engineering | Duration 6 Months |
| H. Diploma in Micro Media | Duration 4 Months |
| I. Diploma in web Multimedia | Duration 4 Months |
| J. Professional Diploma in Graphic Design | Duration 6 Months |
| K. Computer Hardware Technology | Duration 4 Months |
| L. Internet &E.mail | Duration 1 Month |
| M. General Infomation Technology (GIT) | Duration 4 Months |
| N. Information&Communication Technology (ICT) | Duration 4 Months |

2. Short Hand Typing (Enlish) சுருக்கெழுதும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. Short Hand Typing (Tamil) சுருக்கெழுதும் தட்டெழுத்தும் (தமிழ்)
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. Sewing (தையல்)
5. General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்தல்)
6. General Electrician (ஜெனரல் எலக்ரீசியன்)
7. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
8. Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
9. Carpentery (மரவேலை)
10. Refrigeration and Air Conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)
11. General motor cycle Mechanism (மோட்டார் சைக்கிள் திருத்தல்)

மேலதிக விவரங்களுக்கு: (C11453)(5.6.3)

**Registrar,**
**61,(59), St.Patrick's Road, Jaffna.**
**T.P.: 021 222 6148,**
**Fax: 021 222 6148.**
**Email: patricianjaffna@yahoo.com**

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்கலகரமான விஜயவருடம் ஆவணித் திங்கள் 07ஆம் நாள் (23.08.2013)வெள்ளிக்கிழமை பகல் 12.19 மணிமுதல் 1.05 மணிவரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்.



திரு.திருமதி கண்ணன் தம்பதியரின்
செல்வப் புதல்வன் திருவளர்செல்வன்
**ஜெயநந்தன்**
அவர்களுக்கும்

திரு.திருமதி இரவீந்திரன் தம்பதியரின்
செல்வப் புதல்வி திருநிறை செல்வி
**நிஷானா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகன் இல்லத்தில் [2ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை] திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

**திரு.திருமதி கண்ணன் மகேஸ்வரி குடும்பத்தினர்**
Gerberweg 6-8,
51429 Bergish Gladbach,
Germany.
00492204422875



**திரு.திருமதி இரவீந்திரன் சுஜதாஜினி குடும்பத்தினர்.**
2ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
078 561 5016

**(இருவீட்டார் அழைப்பு)**

(39028)(5-6-3)

நிதியியலில் சர்வதேச அங்கீகாரமுடைய
பிரித்தானியத் தராதரம் ஒன்றினைப்
பெற்றுக் கொள்வதற்கான அரிய
சந்தர்ப்பம்

# CISI

CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

ADB EKSP
Education for Knowledge Society Project

GATEWAY GICT

கல்வி அமைச்சின்
**EKSP** செயற்றிட்டத்தின் கீழ்
முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
புலமைப்பரிசில்கள் பற்றிய விபரங்களுக்கு
அழையுங்கள்....

# 021 567 5555

(சி/11435)

## இரண்டாவது திரைப்பட விழா

யாழ்ப்பாணம், ஓக.22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் இந்த வருடத்தின் இரண்டாவது திரைப்பட விழா வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இல.84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் சத்யஜித் ரே இயக்கத்தில் உருவான 'சாத்ராங் கி கிலாரி', ரொபேட் ஜே.ப்ளாஹெர்புயின் இயக்கத்தில் உருவான புகழ்பெற்ற ஆவணப் படமான 'நானுக் ஒவ் த நோர்த்' மற்றும் இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப்படமான பொன்மணி ஆகிய திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இதில் ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம். (வ-10)

## மல்லாகம் ரயில் நிலைய பகுதியில் நாய்கள் தொல்லை

வலி.வடக்கு, ஓக.22
மல்லாகம் ரயில் நிலைய வீதிப் பகுதியில் நாய்களின் அட்டகாசத்தால் பலர் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த வாரத்தில் மட்டும் நான்கு பேருக்கு மேல் நாய்க்கடிக்கு உள்ளாகினர்.

குறித்த நாய்கள் அயல் வீடுகளுக்குச் சென்று கட்டி வைத்திருக்கும் வளர்ப்பு மிருகங்களையும் கூட துன்புறுத்தி வருவதாகவும் இதனையிட்டு யாரும் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-86)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஓக.22
தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட தொழிற் பயிற்சி நிறுவனத்தினர் தையல், அழகுக்கலை, கணினி மென்பொருள், வன்பொருள் ஆகிய பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளனர்.

கைதடி- நுணாவிலில் உள்ள அறவழி தொழிற்பயிற்சி கூடத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்பும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய இளைஞர் யுவதிகளை இணைத்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

# புலமைப் பரிசில் பரீட்சைக்கு 329,725 பேர் தோற்றுவர்



அச்சுவேலி, ஓக. 22
இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 3 லட்சத்து 29 ஆயிரத்து 725 மாணவர்கள் தோற்றுகின்றனர். மாணவர்கள் இயல்பு நிலையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக 2,336 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த வருடம் சிங்கள மொழி மூலம் 2,49,396 மாணவர் களும் தமிழ் மொழி மூலம் 80, 329 மாணவர்களும் மொத்தமாக 3,29,725 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நடைமுறையிலும் இந்த வரும் கண்டிப்பான நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. பொது பரீட்சைகள் நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் அது தொடர்பான தனியார் வகுப்புக்கள் மற்றும் வகுப்புகள் நடை பெறுவது நிறுத்தப்படவுள்ளது.

இந்த வருடமும் பரீட்சை நடைபெறும் பாடசாலைவளாக சுற்றாடலுக்குள் பெற்றோர் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆசிரியர்கள் தமது பாடசாலை மாணவர்களை பரீட்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும். பரீட்சை முடிந்த பின்னர் மீண்டும் மாணவர்களை அழைத்துவந்து பெற்றோரிடம் கையளிக்க வேண்டும்.

> பரீட்சை நடைபெறும் நேரத்தில் மாணவர்களோ மற்றும் பரீட்சை கடமையில் ஈடுபடும் அலுவலர்களோ எவரும் பரீட்சை மண்டபத்தை விட்டு எந்தக் காரணம் கொண்டும் வெளியே செல்ல அனுமதிக்கப் படமாட்டார்கள்.

பரீட்சை நடைபெறும் நேரத் தில் மாணவர்களோ மற்றும் பரீட்சை கடமையில் ஈடுபடும் அலுவலர்களோ எவரும் பரீட்சை மண்டபத்தை விட்டு எந்தக் காரணம் கொண்டும் வெளியே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பரீட்சை நிலைய வாசலில் பொலிஸார் கடமையில் நிறுத்தப்பட்டிருப்பர்.

அத்துடன் பரீட்சை நடைபெறும் காலத்தில் பொலிஸார் விசேட வீதி ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த காலங்களிலும் பார்க்க இந்த வருடம் மிகக் கண்டிப்பான நடைமுறைகள் பரீட்சையில் பேணப்படுவதோடு, மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11-51)



# சங்கானையில் நவீன மீன் சந்தை

யாழ்ப்பாணம், ஓக. 21
சங்கானையில் நவீன மீன் சந்தை அமைக்கப்படவுள்ளது. நவீன வகையில் மீன் சந்தையை அமைப்பதற்கான புதிய காணியை சங்கானை பட்டின சபைத் தலைவர் கே.குணசிறி வழங்க முன்வந்துள்ளார்.

புதிய காணியில் நவீன மீன் சந்தை அமைப்பதற்கான உட்கட்டுமானத்துக்கான எண்ணக்கரு பத்திரத்தை தயார் செய்யுமாறு வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் திட்டமிடல் பிரிவுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை பழைய மீன் சந்தை சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிப்பதுடன் பிரதேச செயலக சூழலுக்கு பொருத்தமற்றதாக இருப்பதனால் புதிதாக வழங்கப்படவுள்ள வயல் காணியில் மீன் சந்தை அமைப்பது தொடர்பாக பொது மக்களின் அபிப்பிராயம் பெறப்படவுள்ளதாக சங்கானை பட்டின அபிவிருத்திச் சபை தெரிவித்தது. (வ-41)

# சுவரொட்டிப் போட்டிக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஓக.22
தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சும் தொழில் திணைக் களமும் சர்வதேச தொழில் நிறுவனத்தின் இலங்கைக் கிளையும் இணைந்து நடத்தும் சுவரொட்டி போட்டிக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டி தரம்- 10 தொடக்கம் தரம்- 11 வரையான பாடசாலை மாணவர்களும், தொழில் பயிலுநர், தொழிற்சாலை ஊழியர் கட்டட நிர்மாணத் துறை ஊழியர் என நான்கு பிரிவு களாக நடத்தப்படவுள்ளது. போட்டியில் பாடசாலை மாணவர்கள் நாம் விபத்துக்களைத் தவிர்த்து எம்மைகாக்கவும்எமதுஅறிவை வளர்க்கவும் செய்வோம் எனும் கருப்பொருளிலும் தொழில் பயிலுநர்கள் "பாதுகாப்பான தொழில்தளம் நாளை தோன்றட்டும்" எனும் கருப்பொருளிலும் தொழில்சாலை ஊழியர்களுக்கு "உங்கள் நோக்கில் பாதுகாப்பான தொழிற்சாலை" எனும் கருப்பொருளிலும் கட்டட நிர்மாணத்துறை ஊழியர்கள் "பாதுகாப்பா வேலைத் தளங்கள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும்" எனும் கருப் பொருளிலும் ஆக்கத்தை வரையலாம்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதிக்கு முன்னதாக தொழில் ஆணையாளர், கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு, தொழில் திணைக்களம், இல.97, ஜாவத்தை வீதி, கொழும்பு-5 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (வ-14)

# ஆரியகுளத்துக்கு அருகிலுள்ள கழிவுகளால் அசௌகரியம்



யாழ்ப்பாணம், ஓக.22
யாழ்ப்பாணம், ஆரியகுளத்தின் வடக்குப் பகுதியில் கொட்டப்படும் குளத்தினுடைய கழிவுகளால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் பொலிஸார் இராணுவத் தினரின் முயற்சியால் யாழ்ப்பாணம் ஆரியகுளம் துப்புரவு செய்யப்பட்டது. குளத்தினுடைய கழிவுகள் அள்ளப்பட்டன. இவ்வாறு அள்ளப்பட்ட கழிவுகளின் ஒரு பகுதி ஆரியகுளம் வடக்குப் பகுதியில் குளத்துக்கு அருகே உள்ள யாழ்ப் பாண மாநகர சபைக்குச் சொந்தமான வீதியில் போடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பெய்யும் மழையின்போது அந்த கழிவுகளில் இருந்து துர்நாற்றம் அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் அந்தக் கழிவுகளிலே பியர் ரின்கள், மதுபான போத்தல்களும் உள்ளதால் அவற்றுக்குள் நீர் தேங்கி நின்று நுளம்பு பெருகுவதற்கான சந்தர்ப்பமும் அதிகரித்துள்ளது. (வ-21)

# பம்பாய் வெங்காயச் செய்கை அராலியில் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.22
அராலி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தம்புள்ள ரெட் உண்மை பம்பாய் வெங்காய விதையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெங்காயச் செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் இரண்டு விவசாயிகளால் பம்பாய் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

ஞானமுத்து செல்வசேகரம் மற்றும் எஸ்.சிவனேசன் ஆகிய இரு விவசாயிகளும் தம்புள்ள ரெட் உண்மை விதையைப் பயன்படுத்தி பம்பாய் வெங்காயச் செய்கையை பரீட்சார்த்தமாக மேற்கொண்டனர் என்று விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் ஆர். சௌந்தரராஜன் தெரிவித்தார். (வ-17)



# வலி. மேற்கில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.22
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கபே அமைப்பும் ஆள்பதிவுத் திணைக்களமும் இணைந்து நடத்தும் தேசிய அடையாள அட்டை பெறுதலுக்கான நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமை சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் 16 வயதை பூர்த்தி செய்து இது வரை அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்களும் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள், மாற்றம் செய்ய வேண்டியவர்கள், புதுப்பிக்க வேண்டியவர்கள் பங்குபற்றிப் பயன் பெறலாம்.

நடமாடும் சேவையில் பங்குபற்றுபவர்களுக்கு தேவைக்கு ஏற்ப புகைப்படம் முத்திரை, பொலிஸ் சான்றிதழ், சமாதான நீதிவான் கடிதம் என்பன இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படும்.

அத்துடன் உத்தேச வயது சான்றிதழ் வழங்கல், பிறப்புச் சான்றிதழ் வழங்கல், காலம் கடந்த பிறப்புப் பதிவு மேற்கொள்ளல் போன்ற சேவையும் இடம்பெறும்.

கலந்துகொண்டு பயன்பெறவுள்ளோர் தங்கள் பிரிவு கிராம சேவகருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (வ-14-29)

### வலி. தென்மேற்கில் வீதி திருத்தப் பணி:

# சபையின் அனுமதியுடன் கொடுப்பனவை ஒப்பந்தகாரருக்கு வழங்குமாறு கடிதம்

வலி.தென்மேற்கு, ஓக.22
தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட சபைக்குரிய வேலைகள் ஒப்பந்தத்தின்படி நிறைவேற்றப் பட்டால் அந்த வேலைகளுக்குரிய கொடுப்பனவுகளை ஒப்பந்தகாரருக்கு சபை வழங்க மறுப்பது சட்டத்துக்கு முரணானதாகும். எனவே குறித்த வேலைகளுக்குரிய கொடுப்பனவுகளை சபையின் அனுமதியுடன் ஒப்பந்தகாரருக்கு வழங்குமாறு வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள இறக்குமாவத்தை வீதி திருத்த வேலையை மேற்கொண்ட ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தின்படி செய்யவில்லை என்று தெரிவித்துள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் அதற்குரிய கொடுப்பனவுகள் வழங்க மறுத்து வருகின்றனர்.

இது குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்டவர்களால் அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து இவ் விடயம்பற்றி உள்ளூராட்சி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி ஆராய்ந்த உள்ளூராட்சி ஆணையாளர் "வலி. தென்மேற்குப் பிரதேச சபை கொடுப்பனவு தொடர்பாக என்னும் தலைப்பில் தவிசாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்துக்கு உட்பட்ட சபையின் இறக்குமாவத்தை வீதி திருத்தவேலைமேற்கொள்வதற்கு குறித்த ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு ஒப்பந்தகாரரினால் இவ்வேலை திருப்திகரமாக செய்து முடிக்கப்படும் இவ்வேலைக்கான கொடுப்பனவு (ரூ.348,750.00) சபையால் வழங்கப்படவில்லை. சபை வேலைகள், பகிரங்க கேள்வி அறிவித்தல் மூலம் சித்திபெற்ற கேள்விதாரருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு ஒப்பந்தப் பிரகாரம் வேலைகள் ஒப்பந்தகாரரினால் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தகாரரின் கொடுப்பனவு சபையால் வழங்கப்படாது மறுப்பது சட்ட முரணானதாகும்.

எனவே குறித்த வீதி திருத்த வேலைக்கான கொடுப்பனவு ரூ. 348,750.00ஐ ஒப்பந்தகாரருக்கு சபை அனுமதியுடன் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.- என்றுள்ளது. (ஒ-115)

# நவக்கிரிக் குளத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்கக் கோரிக்கை

## மட்டக்களப்பு எம்.பி. பொன். செல்வராசா விடுத்தார்



மட்டக்களப்பு, ஓக.22
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நவகிரிகுளத்தில் நவகிரி பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அந்த மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் திங்கட்கிழமை நடைபெற்ற விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

கடந்த 30 வருடங்களாக நீடித்த போர்ச்சூழல் காரணமாக நவகிரிகுளத்தில் மீன் பிடித்து வந்த நவகிரி பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இன்றைய சூழ் நிலையிலும் அங்கு மீன் பிடிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் இந்தக் குளத்தை ஆக்கிரமித்துள்ளனர். இந்த நிலையில், நவகிரிகுளத்தில் நவகிரி பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு மீன்பிடிப்பு தற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நவகிரி குளத்தில் மீன்பிடிப்பதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அங்கு நவகிரி மீனவர் சங்கமும் உள்ளது. இந்த மீனவர் சங்கம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட ஒரு சங்கமாகும். இந்த சங்க உறுப்பினர்கள் என்னை வந்து சந்தித்தனர்.

இதுதொடர்பில் மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு மீன் பிடிப்பதற்குரிய அனுமதியை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

> குளத்துக்கு அத்துமீறி போடப் பட்டுள்ள வேலியை அகற்றி இங்குள்ள விவசாயிகள் பயன் படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்துமீறிய விவசாயக் காணிகளுக்கு அம்பாறை மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளால் நெற்காணிப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பதிவுகளை இல்லாமல் செய்யுமாறு நான் கொழும்பிலுள்ள கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நாயகத்தை 2011 ஆம் ஆண்டு சந்தித்து கேட்டுக் கொண்டேன்.

இந்த அடிப்படையில் சட்டத்துக்கு முரணாக வழங்கப்பட்டுள்ள இந்த அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யுமாறு கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணை யாளர் நாயகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். அவர் உத்தரவிட்டும் இன்னும் அவை நீக்கம் செய்யப்படவில்லை.

கடந்த விவசாய அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் இதை பிரஸ்தாபித்தேன். அத்துமீறிய இந்த நெற்காணிகளுக்கு அம்பாறை மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள நெற்காணிப் பதிவுச் சான்றிதழ்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பழுகாமம் வைத்தியசாலைக்குப் பின்னால் உள்ள குளம் ஒரு முக்கியமான குளமாகும். இந்தக் குளத்திலிருந்து பல ஏக்கர் நெற்காணிகளுக்கு நீர் வழங்க முடியும். அவ்வாறான ஒரு குளத்தை சிலர் அத்துமீறி வேலி போட்டு அடைத்துள்ளனர்.

இதை உடனடியாக கவனத்தில் கொண்டு அந்தக் குளத்துக்கு அத்துமீறி போடப்பட்டுள்ள வேலியை அகற்றி இங்குள்ள விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் இந்த சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார். (வ)

## சட்டவிரோதமாக சாராயம் விற்ற 6 பேர் கைது

அக்கரைப்பற்று, ஓக.22
அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபரொருவர் உட்பட 6 பேரை அக்கரைப்பற்று பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மேற்படி நபர்களை அக்கரைப்பற்று பொலிஸார் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது குறித்த நபர்களுக்கு எதிராக தண்டப்பணம் விதிக்கப்பட்டு தீர்ப்பளித்தார்.

ஆலையடிவேம்பு, வாச்சிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த நபர் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்ததுள்ளதுடன் இவர் முன் குற்றமும் புரிந்துள்ளதனால் இவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

கஞ்சா வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்ட ஏனைய ஐந்து பேருக்கும் தலா மூவாயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதித்து விடுதலை செய்யப்பட்டனர். (வ)


## கஞ்சா வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

அம்பாறை, ஓக.22
அம்பாறை ஹிங்குராணை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் கஞ்சாஉடுத்துச்சென்ற இருவரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

தமண பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஹிங்குராணை நகர் பகுதியில் திங்கட்கிழமைமாலை குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை வீதியில் நிறுத்தி சோதனையிட்டபோது இவர்களின் உடைமைகளில் மறைத்து வைத்திருந்த 80 கிராம் கஞ்சாவை கைப்பற்றியதுடன் இருவரையும் பொலிஸார் கைதுசெய்ததுடன் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி முன்பாக முன்னிலைப்படுத்திய போது இவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டார். (வ)

## இறைப்பு இயந்திரங்கள் அன்பளிப்பு



மட்டக்களப்பு, ஓக.22
போரால் இடம்பெயர்ந்த திருக்கோவில், தங்கவேலாயுதபுரம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தில் 25 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட உறுப்பினர்களான மு.இராஜேஸ்வரன், த.கலையரசன் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை அடுத்து கிழக்கு மாகாண விவசாய கால்நடை அமைச்சர் ஹபீர் நசீரால் இவை வழங்கப்பட்டன. (வ)

## கிழக்கு மாகாண அதிபர்கள் ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி விருது

மட்டக்களப்பு, ஓக.22
கிழக்கு மாகாண அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்கப்படவுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம் அறிவித்துள்ளார்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலாக சர்வதேச மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் விசேட திறன்களை வெளிப்படுத்திய அதிபர்கள் மற்றும் அசிரியர்களுக்கு இந்த ஜனாதிபதி விருது வழங்கப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் கல்முனை ஆகிய கல்வி மாவட்டங்களில் இருந்து தமிழ், முஸ்லிம் சமூகங்களை சேர்ந்த ஐந்து அதிபர்களும் மூன்று ஆசிரியர்களும் என எட்டு பேர் இந்த விருது வழங்கப்படவுள்ளது என மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ)

## சுயதொழில் முயற்சிக்காக தையல் இயந்திரங்கள்



மட்டக்களப்பு, ஓக.22
மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களின் சுயதொழில் முயற்சிக்காக தையல் இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

ஏறாவூர் இமாம் கஸ்ஸாலி நிறுவனத்திற்கே 20 தையல் இயந்திரங்களை கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் வழங்கினார்.

ஏறாவூர் இமாம் கஸ்ஸாலி நிறுவனம், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட்டிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (வ)

## குடிதண்ணீர் இணைப்புக்களை பெற காத்தான்குடியில் உதவி



மட்டக்களப்பு, ஓக.22
மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான உதவிக் கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

ஸ்ரீலங்கா ஹிறா பவுண்டேசன் நிறுவனத்தால் குடி தண்ணீர் இணைப்புக்களை பெறுவதற்காக வழங்கும் உதவித் திட்டத்தின் கீழ் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 194 குடும்பங்கள் இந்த உதவியைப் பெற்றுக் கொண்டன.

அத்துடன், காத்தான்குடி பிரதேசத்தின் கரையோரப் பகுதியிலுள்ள 6 பள்ளிவாசல்களுக்கும் குடிதண்ணீர் இணைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இவ்வருட இறுதிக்குள் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள மேலும் 1,200 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனப் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். (வ)

> வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மேலும் 1,200 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப் புக்களை பெற்றுக்கொள்வதற்கான உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

# தானே தலைவன் என்று சர்வாதிகாரியாக நடந்தோர் வீழ்ந்து மடிந்ததே சரித்திரம்

## நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஒக.22
கொழும்பு மாவட்ட தமிழ் மக்களின் தேவை பிற மாவட்ட மக்களைவிட வித்தியாசமானது. அதனை உணர்ந்து அதற்கு ஏற்றவாறு கொழும்பு மாவட்ட அமைப்பாளர்கள் செயல்பட வேண்டும். தானே தலைவன் என்று சர்வாதிகாரியாக செயற்பட்டோர் வீழ்ந்ததாகவே சரித்திரம் உண்டு என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்
கடந்த திங்கட்கிழமை கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஜனநாயக மக்கள் காங்கிரஸின் மத்திய குழு மற்றும் அமைப்பாளர்கள் கூட்டத்தில் பிரபாகணேசன் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
கொழும்பு மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான ஆதரவாளர்களை கூட்டி கூட்டம் நடத்த வேண்டிய தேவை இப்பொழுது எங்களுக்கு இல்லை. மாறாக கொழும்பு மாவட்டத்தில் வாழும் குறிப்பிட்ட பகுதியிலிருந்து வந்திருக்கும் அமைப்பாளர்களாகிய உங்களுடன் கடந்த கால எமது அரசியல் பணிகளை விளக்கி சொல்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கு மலையக இந்திய வம்சாவளி, வடக்கு கிழக்கு, கொழும்பு மாவட்டத்தை பூர்வீகமாக கொண்டிருக்கும் அனைத்து தர மக்களுக்கும் எமது சேவை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. அமைப்பாளர்களாகிய நீங்கள் எமது கவனத்திற்கு கொண்டு வந்த அனைத்து பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படுகின்றன. கொழும்பு மாவட்ட தமிழ் மக்களுக்கு இன்று பல சவால்கள் உள்ளன.
குறிப்பாக கல்வி, வீட்டுவசதி, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, தமிழ் மொழி அமுலாக்கம், அரச வளங்களைப் பெற்றுக் கொள்ளுதல் இப்படி பல இன்னல்கள் எழுந்துள்ள போதும் நாம் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி இதனை தீர்த்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். இப்படியான அபிவிருத்திப் பணிகளில் நாங்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றோம்.
இன்று அரசு ஆதரவு தெரிவித்திருந்தாலும்கூட நாம் தேசிய பிரச்சினையில் வட கிழக்கு தமிழர்களின் உணர்வுகளை மதிக்கின்றோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்த பொழுதும் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக அவர்களுடன் ஒருமித்த கருத்துடனேயே செயல்படுவோம் என்பதனையும் நான் எடுத்து சொன்னதை அவர்களும் புரிந்து கொண்டார்கள். வெறுமனே தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதாக காட்டுவதன் மூலம் அவர்களது கொழும்பு மாவட்ட அரசியல் நடவடிக்கைகளை தடுக்க நாம் நினைப்பதில்லை.
கொழும்பு, களுத்துறை, கேகாலை மாவட்டங்களை அபிவிருத்தி செய்யக்கூடிய அதிகாரத்தை நான் அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கின்றேன். ஆகவே மூன்று மாவட்டங்களில் இலிருந்து வந்திருக்கும் நீங்கள் மக்களின் உண்மையான தேவைகளை அடையாளங் கண்டு எனக்கு கிடைத்திருக்கும் இன்றைய எனது அதிகாரத்தின் மூலமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார். (எ)

## மாணவியை கடத்த முயன்ற மாணவர்கள் உட்பட ஐவர் கைது

கொழும்பு, ஒக.22
ஜி.சீ.ஈ உயர் தரப் பரீட்சையை எழுதிவிட்டு வீட்டுக்கு சென்று கொண்டிருந்த மாணவியை கடத்தமுயன்ற சம்பவமொன்று ஹோமாகம பகுதியில் இடம் பெற்றுள்ளது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் இருவர் உட்பட ஐந்து பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய் துள்ள



தனர் என மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.
பரீட்சையை முடித்துவிட்டு பஸ்ஸில் கடந்த திங்கட்கிழமை வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போதே குறித்த ஐவரும் மாணவியை கடத்த முயன்றுள்ளனர்.
பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் இவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மஹரகம பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

## 4 அதிகாரிகளை இடைநிறுத்த வேண்டும்

கொழும்பு, ஒக.22
கொழும்பு மாநகரசபையின் முக்கியமான கோவைகள் தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பில் நான்கு அதிகாரிகளை வேலையிலிருந்து இடை நிறுத்துமாறு கோரி மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மேல் மாகாண உள்ளூராட்சி சபைகள் நிர்வாகச் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.
கடந்த 17ஆம் திகதி கொழும்பு மாநகர செயலாளர் திணைக்களத்தின் பல்வேறுபட்ட ஆவணங்கள் அடங்கிய கோவைகள் எதுவித அனுமதியும் இன்றி பொரளை மயானத்



தில் தீ வைக்கப்பட்டமை தொடர்பிலேயே மேயர் இக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். (எ)



இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானிய இளவரசி தகமாடோ கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார். (எ-10)

## டிசிடி அற்ற பால்மாக்களை விநியோகிப்பதற்கு அனுமதி



கொழும்பு, ஒக.22
டிசிடி இரசாயன பதார்த்தம் இல்லை என உறுதி செய்யப்பட்ட பால் மா வகைகளை சந்தையில் விநியோகிக்க சுகாதார அமைச்சு அனுமதி அளித்துள்ளது.
இறக்குமதி செய்யப்படும் 7 வகை பால்மாக்களின் மாதிரிகளை பரிசோதித்த பொரளை வைத்திய பரிசோதனை நிறுவனம் சுகாதார அமைச்சுக்கு அறிக்கை சமர்பித்ததை அடுத்தே குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பால் மா வகைகளில் 7 மாதிரிகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைக் குழுவிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## நுரைச்சோலை அனல் மின் நிலையம் மூன்று வாரங்களுக்கு இயங்காது




நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகள் மூன்று வாரங்களுக்கு நிறுத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுத் தொடக்கம் நுரைச்சோலை அனல் மின் நிலையம் மூன்று வாரங்கள் மூடப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
அனல் மின் நிலையத்தை 2ம் கட்டத்துடன் இணைக்கும் நோக்கில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதால் மூன்று வாரங்களுக்கு நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளனர்.
மின்சாரம் வழங்கும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுவதால் தடையின்றி மின்சார விநியோகம் செய்ய முடியும் என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.(எ)

## அரியவகை இரத்தினக்கல் கடத்த முற்பட்ட நபர் கைது

கொழும்பு, ஒக.22
இலங்கையில் இருந்து சிங்கப்பூருக்கு அரிய வகையான இரத்தினக் கற்களை கடத்திச் செல்ல முற்பட்ட நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.
பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே இரத்தினக் கற்களை காலுறையில் மறைத்து வைத்து கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் கட்டு நாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்த நபரிடமிருந்து 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான அரியவகையான இரத்தினக் கற்களை கைப்பற்றிய விமான நிலைய சுங்க அதிகாரிகள் இவரிடமிருந்து ஒரு இலட்சம் தண்டப் பணம் அறவிட்டுள்ளனர். (எ)

நபரிடமிருந்து 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிய வகையான இரத்தினக் கற்கள் கைப் பற்றப்பட்டன.



## விஜித தேரர் மீது குழுவொன்று தாக்குதல்

கொழும்பு, ஒக.22
மஹியங்கனை, மகாவலி ரஜமகா விகாரையின் விகாராதிபதியும் மஹியங்கனை பிரதேச சபை உறுப்பினருமான வடரேக விஜித தேரர் மீது இனம்தெரியாத குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.
மஹியங்கனையிலிருந்து கொழும்பு நோக்கி கெப் வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது ஓட்டோவில் வந்தவர்களால் பிலிமத்தலாவ பிரதேசத்தில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தாக்குதலில் காயமடைந்த வடரேக விஜித தேரர் தற்போது கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.
இந்த தாக்குதல் சம்பந்தமாக அவர் தெரிவித்ததாவது:-
18ஆவது வளைவிலிருந்து தன்னைத் தொடர்ந்து வந்த குழுவினர், பொது பல சேனாவைப் பற்றி தான் விமர்சித்ததாக கூறி தன்மீது தாக்குதல் நடத்தினர். தாக்குதல் நடத்த வந்தவர்கள் கண்டி பொது பல சேனா கிளையின் தலைவருடன் வந்து எனது வாகனத்தையும் சேதப்படுத்தியுள்ளனர்.
அந்தவேளை கேகாலை பொலிஸ் நிலையத்தில் தான் தஞ்சமடைந்ததாகவும் அங்கு தாக்குதல் தொடர்பில் முறைப்பாடு செய்து அமைச்சர்கள், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டவர்களை தொடர்பு கொண்டு பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பு வந்ததாகவும் தெரிவித்தார். (எ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரச நிர்வாக சேவைப் பதவிகள்; வடக்கு, கிழக்கில் எந்த நியமத்தில்…?

இலங்கை நிர்வாக சேவை (தரம்-III) தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய பலரில் 49 பேர் சித்தியடைந்தனர். அவர்களில் 43 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுப் பின்னர் நியமனப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

அவர்களில் ஒருவருக்கு மட்டுமே, கிழக்கு மாகாணத்தில் கடமை செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஏனையோருக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலேயே பணியாற்ற வேண்டிய நிலை உண்டாகியுள்ளது, உருவாக்கப்பட்டிருக்கிறது.

இத்தனைக்கும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள அரச அலுவலகங்கள் பலவற்றில் தமிழ் மொழி மூலம் பணியாற்றுவற்கு பல வெற்றிடங்கள் உண்டு எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தமிழ் மொழி மூலம் பயின்றவர்கள், சிங்களத்தில் தேர்ச்சி அடைவதற்காகவே குறிப்பிட்ட காலப் பகுதியில் தமிழ்ப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டதாகவும் கொள்ளலாம், ஆனால் அது குறித்து எந்தவித உறுதியான, உத்தியோகபூர்வ தகவலும் இதுவரை இல்லை.

பாதிப்புற்றவர்கள் இது குறித்து வினா எழுப்பியும் பொது நிர்வாக அமைச்சு வாளாதிருப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

அதனால், பரீட்சையில் சித்தி பெற்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நியமிக்கப்படலாம் என்ற அச்சம் தமிழ் மொழி மூலம் தேறியவர்கள் மத்தியில் நிலவுகிறது.

தமிழ் மொழி மூலப் பரீட்சையில் தேறி நியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு, வடக்கில் மாகாண சபைத் தேர்தல் காலம் என்பதால், இப்போது வேறு மாகாணங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. தேர்தல் முடிவுற்ற பின்னர் இப்போதைய நிலை மாற்றப்படுமா என்பது குறித்த வெளிப்படுத்தல்கள் தானும் எதுவுமில்லை.அதனால் -

தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படவுள்ள பெரும்பான்மை இன உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக இங்கு பணிக்கு அமர்த்தப்படுவார்களா என்ற வினா, விடையின்றித் தொக்கி நிற்கிறது.

அரசும் அதன் அதிகாரிகளும் தமது நினைப்புகளை, நிறைவேற்றுவதனை எவரும் தடுக்க முடியாது என்ற நிலை மேலோங்கி வருவதனை இத்தகைய செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன. அல்லவா?-

இதேவேளை, கடந்த ஆண்டில் ஐம்பதினாயிரம் பட்டதாரிப் பயிலுநர்களை அரசாங்கம் உள்வாங்கியது. அவர்களில் பத்தாயிரம் பேர்களை நிர்வாக உத்தியோகத்தர்கள், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், நூலகர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், கிராம அலுவலர்கள் என்ற வகையறாக்களில் உள்வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் வெளிவருகின்றன.

அது ஒரு புறமிருக்க -

இலங்கை நிர்வாக சேவை தரம் மூன்றுக்கு, போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு, அரச நிர்வாக சேவை அதிகாரிகளாக நியமனம் பெறுபவர்களே, பின்னர் மாவட்ட செயலாளர்களாகவும் நியமிக்கப்படுவது உண்டு.

மாவட்டங்களின் பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளையும் அவர்கள் மேலதிகமாக ஆற்றுவதுண்டு. தேர்தல்கள் நடைபெறும் காலங்களில் அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளாக அவர்களுக்கே பொறுப்பு அளிக்கப்படுகிறது.

இத்தனைக்கும் மத்தியில், அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும் எண்ணிக்கையில் நியமிக்க வசதியாகவே அரச தரப்பு தமிழ் மொழி மூலம் தேறியவர்கள் குறித்து மௌனம் சாதிக்கிறது என்ற சந்தேகமும், ஆதங்கமும் நியாயமானதே.

# ஜனநாயகத்தை வேரறுக்கும் குடும்ப ஆட்சி

• ராஜராஜன்



தற்போதைய நவீன உலகிலும் மன்னராட்சி தொடரும் நாடுகளை ஒத்ததாக ஜனநாயக நாடுகள் பலவற்றில் குடும்ப ஆட்சி முறைமை கொடிகட்டிப் பறப்பதைக் காண முடிகின்றது.

ஜனநாயகம் என்பது மக்களின் பூரணமான சுதந்திரத்தை வெளிப்படுத்தும் மேன்மையானதொரு நெறியாகும். சமீப காலமாக இதற்கும் பல்வேறு சோதனைகள் ஏற்பட்டு வருகின்றன. ஜனநாயகத்தின் பெயரைக் கூறிக் கொண்டு பிழைப்பு நடத்திவரும் போலியான ஜனநாயக வாதிகளே இத்தகைய சோதனைகளை ஜனநாயகத்துக்கு ஏற்படுத்தி வருகின்றனர். அதிலும் குடும்ப ஆட்சி முறைமை என்பது ஜனநாயகத்தின் ஆணி வேரையே சிதைத்து வருகின்றது.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடெனக் கூறப்படும் இந்தியாவில் அது அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற தினத்திலிருந்து இன்று வரை ஆட்சியதிகாரங்கள் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைக் காண முடிகின்றது.

குறிப்பாக காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருக்கும் போது நேரு குடும்பத்தினரின் அதிகாரமே அங்கு அனைத்தையும் ஆட்டிப் படைக்கின்றது. 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இந்திய தேசம் ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர நாடாக உதயமானது. இந்தியாவின் மிகவும் செல்வாக்குப் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த ஜவஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரானார். இவரது மறைவுக்குப் பின்னரும் நேரு குடும்பத்தினரின் அதிகாரம் நீடித்தது. நேருவின் மகளான இந்திராகாந்தி தொடக்கம் ராஜீவ் காந்தி, சோனியா காந்தி என குடும்ப அதிகாரம் நீடித்து வருகின்றது. சோனியா காந்தி வெளிநாட்டில் பிறந்தவர் என்பதால் ஆட்சியதிகாரத்தில் அமர முடியாது விட்டாலும் வெளியில் இருந்து கொண்டு ஆட்சியை நடத்தி வருபவர் இவர்தான். அவரது புதல்வரான ராகுல் காந்தியை அடுத்த பிரதமராக்குவதற்கான ஏற்பாடுகளும் திரை மறைவில் இடம்பெற்று வருகின்றன. எனவே நேரு குடும்பத்தின் அதிகாரம் தொடரத்தான் போகின்றது. ஆனால் மோசடிகளும், துஷ்பிரயோகங்களும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போபர்ஸ் பீரங்கி ஊழல் தொடர்பான சர்ச்சைகள் இன்னமும் ஓய்ந்ததாகத் தெரியவில்லை. ராஜீவ் காந்தியின் திடீர் சாவினால் இந்தச் சர்ச்சை சற்று ஓய்ந்து காணப்படுவதாகத் தெரிகின்ற போதிலும் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது.

### இலங்கையிலும் தொடரும் குடும்ப அரசியல்

எமது நாடு இதற்கு விதி விலக்காகத் தெரியவில்லை. பண்டாரநாயக்கா குடும்பத்தில் ஆரம்பித்து தற்போதைய ஜனாதிபதியின் குடும்பம் வரை இது விஸ்தரித்துள்ளது. சகல முக்கிய அதிகாரங்களும் இந்தக் குடும்பத்தின் கரங்களில் இருப்பதால் நாட்டு மக்கள் வாயைத் திறப்பதற்கே அச்சப்படுகின்ற சூழ்நிலை தற்போது காணப்படுகின்றது. மேலும் ஜனாதிபதியும் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டிருப்பதால் தாம் எந்த நிலையிலும் பாதுகாக்கப்பட்டு விடுவோம் என்ற துணிவும் இந்தக் குடும்ப அங்கத்தினரின் மனங்களில் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் எவருக்கும் அஞ்சாது எதனையும் நிறைவேற்றிவிடக் கூடிய வல்லமையை இவர்கள் கொண்டிருக்கின்றனர்.

### தமிழர்களின் சாவு தென்னிலங்கையில் வெற்றி விழா

இறுதிப் போரின் போது பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் துடிக்கத் துடிக்க இறந்த போது அதனையொரு வெற்றி விழாவாகவே தென்பகுதி மக்கள் கொண்டாடினர். தமிழர்களைப் பற்றிய எந்தவொரு அனுதாப உணர்வும் அவர்களிடத்தில் எழவில்லை. எழவைக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. மேலும் போரின் போது இடம்பெற்ற கொடிய சம்பவங்கள் வெளியில் தெரியாதவாறு திட்டமிட்டு மறைக்கப்பட்டன. இதற்கொரு முக்கிய காரணமும் உள்ளது. இந்த விடயங்கள் வெளியில் தெரிய வந்தால் குறிப்பிட்ட குடும்ப அங்கத்தினர் சிலர் குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டி வரும் என்ற அச்ச உணர்வே அதுவாகும். ஆகவே குடும்ப ஆட்சி முறைமை இருக்கும் எந்தவொரு நாட்டி லும் பெரிய குற்றங்கள் கூட இலகுவாக மறைக்கப்பட்டு விடும் என்பதற்கு எமது நாடு நல்லதொரு உதாரணமாகத் திகழ்கின்றது. ஈராக் நாட்டின் முன்னாள் அதிபராக விளங்கிய சதாம் ஹூசைன், லிபிய நாட்டின் சர்வாதிகாரி கடாபி, பாகிஸ்தானின் பூட்டோ ஆகியோரின் குடும்பங்கள் ஆட்சி செய்த போது அந்த நாடுகளின் மக்களுக்கு நன்மையைத் தவிர தீமைகளே அதிகளவில் பரிசாகக் கிடைத்தன. இதற்கு உதாரணமாக இன்னும் பல நாடுகளை உதாரணமாகக் கூற முடியும்.

### தமிழ் நாடும் விதிவிலக்கல்ல

எமது உடன் பிறப்புக்கள் வாழுகின்ற இந்தியாவின் தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. அங்கும் குடும்ப ஆட்சி முறைமை வேரூன்றிக் காணப்படுகின்றது.

குறிப்பாகத் திராவிடக் கட்சிகளைப் பொறுத்தவரை இது அதிகளவில் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் தந்தை பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட திராவிடக் கழகத்திலிருந்து தோன்றியவையே ஏனைய திராவிடக் கட்சிகள் தி.மு.க., அ.இ. அ.தி.முக., மறுமலர்ச்சி தி.மு.க. எனப் பல்வேறு கட்சிகள். திராவிடர் கழகத்தைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

தி.மு.கவின் ஸ்தாபகத் தலைவரான அறிஞர் அண்ணாத்துரைக்கு வாரிசுகள் இல்லாததால் குடும்ப ஆட்சிக்கான வாய்ப்புக்கள் எழவில்லை. இதைப் போன்று அ.இ.அ.தி.மு.வின் ஸ்தாபகருக்கும் வாரிசுகள் இருக்கவில்லை. ஆனால் அவரது மறைவுக்குப் பின்னர் அவரது மனைவி ஜானகி அரசியலில் குதித்த போதிலும் அதில் அவர் வெற்றி பெறவில்லை. தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் வெற்றிடத்தை நிறைவு செய்துள்ளார். அவரது ஆட்சியிலும் குடும்ப ஆட்சி முறைமைக்கு வாய்ப்புக்கள் இருக்க வில்லை. ஆனால் இதற்கு எதிர்மாறாக கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான தி.மு.க. அவரது குடும்பத்தினரின் பூரண கட்டுப் பாட் டிலுள்ளது. இதனால் தி.மு.க. ஆட்சி பீடம் ஏறும்போது அவரது குடும்பத்தினரின் அதிகாரம் தலைதூக்கும். இதனால்கரு ணாநிதி பல சந்தர்ப்பங்களில் இக்கட் டான நிலைக்குத் தள்ளப்பட்டதும் உண்டு.

### மன்னராட்சியாக மாறும் ஜனநாயக ஆட்சி

இதைப் போன்றதொரு நிலை இந்தியாவின் பல மாநிலங்களிலும் காணப்படுகின்றது. இதுவொரு சாபக்கேடு என்றுதான் கூற வேண்டும். மன்னராட்சியை ஒழித்து விட்டோம்- ஜனநாயகம் என்பது பொதுவுடமை - அதனைத் தனியார் எவரும் ஏப்பம் விடுவதற்கு அனுமதிக்க மாட்டோமெனக் கூறிக்கொண்டு குடும்ப ஆட்சியின் மூலமாக மன்னராட்சியை நினைவுபடுத்துவது எந்த வகையிலும் நியாயமாகத் தெரியவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால் இதை யொரு ஏமாற்று வித்தையென்றே கூற வேண்டும்.

உலகின் பெருமை மிக்க தலைவர்கள் பலர் நாட்டின் ஆட்சியதிகாரத்தில் தமது குடும்பத்தின் நிழல் விழுவதைக் கூட விரும்புவதில்லை. ஏனென்றால் அவர்கள் ஜனநாயகத்தை அவ்வளவுக்கு மதித்தார்கள். அதனைச் செயலிலும் காட்டினார்கள். இதனால் அனைத்துத் தரப்பினருக்கும் சம நீதியை வழங்கக் கூடியதாக இருந்தது.

### எப்பொழுது கைவிடுவார்கள்?

ஆகவே இனிமேலாவது ஆட்சியில் இருப்பவர்கள் குடும்ப ஆட்சியை ஏற்படுத்துவதிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ள வேண்டும். தகுதி இருக்கின்றதோ இல்லையோ தமது வாரிசுகளுக்குப் பட்டம் சூட்டுவதும் ஏனையவர்கள் அவர்களின் சொல்லை சிரமேற்கொண்டு பணிந்து நடக்க வேண்டுமெனவும் எதிர்பார்ப்பதும் மிகக் கேவலமான செயல்களாகும். நாட்டு மக்கள் ஏதோ அதிகாரத்தை வழங்கி விட்டார்கள் என்பதற்காக எல்லாமே நாம் என்ற இறுமாப்பில் செயற்படும் ஆட்சித் தலைவர்களின் எதிர்காலம் படுகுழியில் வீழ்ந்துவிடும் என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனால் இதை உணர்வதற்கு அவர்கள் தவறுவதுதான் வேதனையளிக்கின்றது. மக்களால் உருவாக்கப்பட்ட அரசு மக்களுக்குரியதேயன்றி எனது குடும்பத்துக்குரியதல்லவென எப்போது ஒரு நாட்டின் தலைவன் சிந்திக்கின்றானோ அப்போதுதான் குடும்ப ஆட்சி முறைமை ஒழியும். உண்மையான ஜனநாயகம் மலரும் என்பதில் சந்தேகமே இல்லை.

இதற்காகத்தான் உண்மையான ஜனநாயகவாதிகள் காத்திருக்கிறார்கள்.

# நல்லூரான் வீதி வழி ஒரு பொழுது.....

தர்ஷன்







யாழ்ப்பாணம் என்றவுடன் எல்லோருக்கும் நினைவு வருவது நல்லூர் முருகன் கோவில் தான். ஏன் என்றால் இந்த ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது.


என்வே, இதை எல்லோரும் நினைவில் வைத்திருப்பார்கள். அந்த வகையில் இப்போது கூட நல்லூர் முருகனுக்கு திருவிழா இடம்பெற்று வருகின்றது. இதைப் பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தவண்ணமுள்ளன. மாலை 3.00 மணி திருநெல்வேலி பக்கமாக சென்ற நான் பக்கத்தில் நல்லூர் கோவிலுக்கு செல்லலாம் என நினைத்து எனது உந்துருளியை திருப்பினேன்.

அங்கே கோவிலில் இருந்து சுமார் 500கிலோ மீற்றர் தூரத்திலேயே பலர் எனது உந்துருளியை மறித்தார்கள் காரணம், உந்துருளியுடன் உள்ளே போகத் தடை. இது சட்டம், பாஸ் இருந்தால் மட்டும் விடுவார்களாம். அங்கேயே சைக்கிள் பாதுகாப்பு வேறு. உடனே அங்கேயே உந்துருளியை விட்டேன். உடனே எனது கையில் 5 ரூபா ரிக்கெட் சைக்கிள் பாதுகாப்பிற்காக என்றார்கள். அதை வாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தால் வீதியின் இரு புறமும் கடைகள் அதிலும் அதிகமாக கச்சான் கடைகள் இருந்தன. அங்கே இருப்பவர்கள் வயது முதிர்ந்தவர்கள். கணவனும் மனைவியுமாக இவர்கள் கச்சான் விற்றுக் கொண்டு இருந்தார்கள். கச்சான் கடலை வறுத்து வறுத்து கறுத்துப் போன உடல்களும் வெக்கையால் சிவந்துபோன கண்களுமாய் அவர்கள் இருந்தார்கள். என்னதான் காஸ் அடுப்பு வந்தாலும் எமது பாரம் பரிய அடுப்பில் மூன்று புறமும் நெருப்பு பறக்க பெரிய தாச்சியில் கச்சான் வறுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய கடைகள் சிறியசிறிய கொட்டில்களாக இருந்தன.

இவற்றை எல்லாம் அவதானித்துக் கொண்டு சற்றுத் தூரம் சென்றால் அங்கே இரண்டு சிறுவர்கள் கற்பூரத்தை கைகளிலே கொண்டு வந்து கோயிலுக்கு வருபவர்களிடம் விற்பதற்காக அங்கும் இங்குமாகத் திரிகிறார்கள். சிலர் வாங்குகின்றனர் சிலர் உதாசீனம் செய்கின்றனர். சிறுவர்கள் கற்பூரத்தை மறைத்து வைத்துக்கொண்டு ஆள்கள் வந்தால் மட்டும் அதை வெளியே எடுத்து விற்கின்றனர். அவர்களிடம் கதைப்பதற்காகச் சென்றால் அவர்கள் ஓடி ஒளிந்து விட்டனர். என்னதான் கட்டாயக் கல்வி என்றாலும் சிறுவர் தொழிலாளிகளை இல்லாது ஒழிப்பது என்றாலும் இன்றும் இந்தச் சிறுவர் தொழிலாளிகள் இருக்கவே செய்கின்றனர். இவர்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. திருவிழா களைகட்டுவது பல விளம்பரக்கம்பனிகளின் வீதிச்சோடனைகளால் என்பதும் உண்மைதான். வீதி எங்கும் பல கம்பனிகள் தங்களுடைய விளம்பரத்துக்காகவும் வியாபாரத்துக்காகவும் சோடனைகளை யும் சினிமா, பக்தி பாடல்களும் பெரிய சத்தத்துடன் ஒலிக்கும்படி செய்துள் ளார்கள். இவை வெறும் ஆரம்பம் தானே, போக போகத் தெரியும்.



கோயில் வாசலிலே எப்படியாவது வாழ்க்கையில் முன்னேறி விடவேண் டும் என்ற வெறியுடன் உழைக்கும் ஒரு கூட்டம், கோவிலுக்குள்ளே சிறுவர் கள் உட்பட பிச்சை எடுக்கும் இன்னொரு கூட்டம். சிலருக்கு இதைப் பார்த்தால் பழக்கப் பட்டதாக இருக்கும். ஆனால் எமது சமுதாயம் எப்படி இருக்கின்றது என்பதை ஒரு முறை சிந்தித்தால் எதிர்காலம் புரியும்.



அடுத்து கோயிலை அண்மித்ததும் பாதணிகளைப் பாதுகாக்க ஒரு கடை, அங்கே கூட 5ரூபா கொடுக்க வேண்டும். கொடுத்தால் பாதணிகள் பத்திரமாகக் கிடைக்கும்.

கோவிலுக்கு உள்ளே சென்றால் கோவிலைச் சுற்றி மணல் பரப்பப் பட்டுள்ளது. காரணம் கோவில் சுத்தத்தை பேணுவதற்காக. இது யாழ் மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டது. அந்த மண் ஆலய சுத்தத்துக்கு பயன்படுகின்றதோ இல்லையோ கோயிலுக்கு வரும் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நன்றாகப் பயன்படுகின்றது.

பல சிறுவர்கள் மண்ணை அள்ளி கோபுரம் கட்டுகின்றனர், பலர் வீடு கட்டுகின்றனர். இப்படி இவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் போது ஒரு சிறுவன் மட்டும் அவர்களைப் பார்த்தபடி சுவரிலே சாய்ந்தபடியிருந்தான். அவனதுகையில்ஊன்றுகோள்இருந்தது. கீழே பார்த்தால் ஒரு கால் இல்லை. எனக்கு உடனே போர் நினைவுக்கு வந்தது. அவனிடம்சென்று விசாரித்ததில் நான் நினைத்தது தவறு. அவனுக்கு ஏதோ கட்டு வந்ததாகவும் அதனால் காலை எடுத்து விட்டார்கள் எனவும் கூறினான். பாவம் சின்ன பையன் விதி அவனுடைய காலில் விளையாடியதால் அவனால் விளை யாட முடியவில்லை. ஆகவேதான் சோகத்தில் அமர்ந்திருந்தான்.

அன்று கோவிலுக்கு வரும் பக்தர்களைவிட அங்கே காக்கி உடை அணிந்தவர்களுடைய நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டது. அவர்களில் பெண்களும் இருந்தார்கள்.

"அன்பார்ந்த பொது மக்களே, இவர்கள் போன்ற திருடர்கள் கைவரிசையில் இருந்து உங்கள் பணம், நகைகள், பொருள்களை பாதுகாத்துக் கொள்ள விழிப்புடன் இருங்கள்" என்று எழுதப்பட்டு நான்கு பெண்களின் புகைப்படங்களைத் தாங்கிய சுவரொட்டிகள் அங்கே ஒட்டப்பட்டிருந்தன. இதற்குத்தான் இவ்வளவு காக்கி உடை அணிந்தவர்கள் நிற்கிறார்கள் போலும் என எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

ஆலயச் சூழலிலே பல இடங்களில் வாளிக்குள் துப்புங்கள், குப்பைகளை வாளிக்குள் போடுங்கள் என்று எழுதப்பட்டு காணப்படுகின்றன.

முன்னைய காலங்களில் ஆலய சூழலில் பிச்சை எடுத்து பிழைப்பு நடத்த ஒரு கூட்டம் இருந்தது. ஆனால் தற்போது அதில் கூட பெரியதொரு மாற்றம் தெரிந்தது.

வயதுக்கும் அப்பால் கற்பூரம் விற்பதிலும் தேங்காய் விற்பதிலும் முதியவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். வயதின் முதிர்விலும் தள்ளாமையின் வெளிப்பாடுகளை மறந்து உழைத்து வாழ வேண்டும் என அவர்கள் நினைப்பது மனதுக்கு மகிழ்வைத் தந்தது.

யாழ்ப்பாணத்தில் தெரு நாய்களின் தொல்லை தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றுக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அண்மையில் யாழ் மாவட்ட அரச அதிபர் தலைமையில் கச்சேரியில் ஒரு சிவில் சமூக கூட்டம் இடம் பெற்றது. அதிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பலரும் கலந்து கொண்டனர். அங்கே இந்த தெரு நாய்கள் பற்றிய கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனாலேயோ என்-னவோ இப்போது யாழ் மாநகர சபை யால் தெரு நாய்கள் விரட்டிப் பிடிக்கப் படுகின்றன. அந்த வகையில் நல்லூர் கோயில் சூழலிலும் நாய்களின்நடமாட்டம்காணப்படுவதால் இந்த நாய் பிடிப்பவர்கள் அங்கே நடமாடிக் கொண் டிருந்தார்கள்.

நாய் ஒன்று படுத்திருப்பதை கண்ட இவர்களில் ஒருவர் பதுங்கி பதுங்கி போய் நாயினுடைய கழுத்தில் கம்பியை போட்டுப் பிடித்தார் நாய் தப்பிக்க முற்பட்ட போதும் அதனால் முடியவில்லை. சிறிது நேரத்தில் அமைதியாக பிடித்தவர் பின்னால் சென்றது. இது கோவிலுக்கு வந்தவர்களிடம் ஒரு வேடிக்கையான நிகழ்வாகவும் இருந்தது. நாயை வளைத்து வளைத்துப் பிடிக்கும் இந்தச் சமூகம் கைகளிலே கற்பூரத்தோடு திரியும் குழந்தைத் தொழிலாளர்களை ஏன் கவனத்தில் எடுக்கவில்லை. இரண்டுமே சமகாலத் தில் ஆலயத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளே.

கோயில் வாசலிலே எப்படியாவது வாழ்க்கையில் முன்னேறிவிடவேண்டும் என்ற வெறியுடன் உழைக்கும் ஒரு கூட்டம், கோவிலுக்குள்ளே சிறுவர்கள் உட்பட பிச்சை எடுக்கும் இன்னொரு கூட்டம். இது இன்று நேற்றல்ல பல வருடங்களாக ஆலயங்களிலே நடைபெறுவதுதான். சிலருக்கு இதைப் பார்த்தால் பழக்கப்பட்டதாக இருக்கும். ஆனால் எமது சமுதாயம் எப்படி இருக்கின்றது என்பதை ஒரு முறை சிந்தித்தால் இதன் எதிர்காலம் புரியும்.

# பாதித் தூரத்தைக் கடந்தது வியாழன் கிரக விண்கலம்


அமெரிக்காவின் நாசா விண்வெளிமையத்தின் ஆராய்ச்சியாளர்கள் சூரியக் குடும்பத்தின் பெரிய கிரகமான வியாழன் கிரகத்துக்கு ஒரு விண்கலத்தை செலுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். கடந்த 2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி ஜூனோ விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின் மதிப்பீடு 1.1 பில்லியன் டொலர் ஆகும். இந்த விண்கலத்தின் பயணகாலமும் ஐந்து ஆண்டுகளாக திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த திங்களன்று நாசாவில் இருந்து வெளிவந்துள்ள ஓர் அறிக்கையில் ஜூனோ விண்கலம் வியாழனுக்கு செல்லும் தனது பயணத்தில் பாதி தூரத்தைக் கடந்துவிட்டதாக தகவல் வெளியிட்டுள்ளது. இது இந்தப் பயண வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

விண்ணின் தூரத்தை அளக்கும் அஸ்ட்ரோனாமிகல் அளவின்படி, 9.464 என்ற கணக்கீட்டினை ஜூனோவின் அளவுமானியான ஓடோமீட்டர் தெரிவித்துள்ளதாகவும், இது வியாழன் கிரகத்தின் அமைவிடத்திலிருந்து பாதி தூரமாகும் என்று சான் அந்தோனியாவின் சவுத் வெஸ்ட் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த ஸ்காட் போல்டன் தெரிவித்துள்ளார். இவர்தான் ஜூனோ விண்கலத்தின் பிரதான வடிவமைப்பாளர்.

இந்த விண்கலத்தின் அடுத்த சாதனை நிகழ்வு, வரும் அக்டோபர் மாதம் அது சற்று அதிக வேகத்துடன் பூமியைக் கடக்கும்போது ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2016ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் திகதி வியாழனின் கோள்பாதையை இந்த விண்கலம்அடையும்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது. வியாழன் கிரகத்தினை ஒரு துருவத்திலிருந்து மற்றொரு துருவம் வரை 33 முறை இந்த விண்கலம் சுற்றிவரும். அப்போது விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள எட்டு அறிவியல் உபகரணங்கள் இந்த வாயுக் கோளத்தின் உட்பொருள்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்படும். இந்தப் பயணத்தின் மூலம், ஜூனோவின் அறிவியல் அணி,-வியாழன் கிரகத்தின் தோற்றம், அமைப்பு, வளி மண்டலம், காந்த ஈர்ப்புகள் மற்றும் இந்தக் கிரகத்தின் திடமான அடிப்படை மூலக்கூறுகள் போன்றவற்றை அறியும் முயற்சியில் ஈடுபடும்.


2016ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் திகதி வியாழனின் கோள் பாதையை இந்த விண்கலம் அடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.



# உணவுக்குப் பின் குளிர்பானம் அருந்துவது ஆபத்து

உணவு உட்கொண்ட பின் உடனடியாக குளிர்ந்த தண்ணீரோ, குளிர்பானமோ அருந்துபவர்களுக்கு இதய பாதிப்பு ஏற்படும் ஆபத்து அதிகம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். உண்ட உணவில் உள்ள எண்ணெய், கொழுப்புகளை ரத்த நாளங்களில் குளிர்பானங்கள் படியச் செய்வதே இதற்குக் காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.
ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவர்களான ஜப்பானிய பெண்களின் சராசரி அதிகபட்ச ஆயுள்காலம் 92. ஜப்பானிய ஆண்கள் 84 வயது வரை உயிர் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் அவர்களது உணவுப் பழக்கம். பச்சைக் காய்கறிகளையும், பழங்களையும் அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்கின்றனர். உணவு உண்டவுடன் வெதுவெதுப்பான வெந்நீர் உட்கொள்கின்றனர்.
எம்மில் பலர் தற்போது குளிர்சாதனப் பெட்டியில் வைத்த குளிர்ந்த தண்ணீரை அருந்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். கிராமமோ, நகரமோ இன்றைக்கு குளிர்ந்த நீர்தான். கோடை காலம் தொடங்கிவிட்டது. இனிக் காலை உணவில் தொடங்கி இரவு உணவு வரைக்கும் உபயோகிப்பது குளிர்ந்த தண்ணீர்தான் தான். இவ்வாறு குளிர்ந்த நீர் அருந்துவது ஆபத்தானது என்கின்றனர் மருத்துவர்கள். இது இதயத்தை பாதிக்கிறது. புற்றுநோய்க்கும் வழி வகுக்கிறது என்கின்றனர் மருத்துவர்கள்.
உணவு உண்டவுடன் குளிர்ச்சியான குடிதண்ணீரைக் குடித்தால்,
அது நாம் உண்ட உணவில் உள்ள எண்ணெய்த் துகள்களை கட்டியாக்கி விடுகிறது. இதனால், சாப்பிட்ட உணவு சமிபாடு ஆவதில் சிக்கல் ஏற்படுகிறது. அதுமட்டுமன்றி உடலில் இருக்கும் கொழுப்பின் அளவு அதிகரிக்கவும் அது காரணமாகி விடுகிறது.
இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இதயம், சிறுநீரகம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் வரலாம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.
மாரடைப்பு நோய் உள்ளிட்ட இதயநோய்க்கு உள்ளானவர்கள் உணவு உண்ணும் குளிர்ந்த குடிதண்ணீரை குடிக்கக் கூடாது. குளிர்ந்த தண்ணீர் குடிப்பதனால் வேறு பல தீமைகளும் ஏற்படும். நெஞ்செரிச்சல், உயர் ரத்த அழுத்தம், சருமப் பாதிப்பு, பக்கவாதம், வயிற்றுவலி, பற்கள் பாதிப்பு ஆகிய நோய்கள் ஏற்படுகின்றன. எனவே குளிர்ந்த தண்ணீர் அருந்துவதைத் தவிர்த்துவிடுங்கள். அதற்குப் பதிலாக வெதுவெதுப்பான நீர் அருந்துங்கள் என்கின்றனர் மருத்துவர்கள்.





# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே

அரசியல் என்பது ஆண்களுக்கே உரியது. பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகங்கள் வரை இந்த அரசியல் என்ற பதம் (பாடம்) நடைமுறையில் உள்ளது. ஆனால் இது வெறுமனே பாடமாகவேதான் இருந்து வருகின்றது. அதற்குக் காரணம் அதைப் பயில்பவர்கள் அதிகமாகப் பெண்களே. இதனை வைத்துப் பார்க்கும் போது அரசியலில் அதிகம் பிரவேசிப்பவர்கள் ஆண்களே ஆவர்.

*நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்*
*புல்லுக்கு மாங்கே பொசியுமாம்*

என்று பாடினார் ஔவையார் இதை அரசியலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆண்கள்தான் அரசியலில் அதிகம் பிரவேசிக்கின்றனர். அங்கே வாய்க்கால் வழியோடி வளர்ந்த புற்கள்தான் பெண்கள்.
அரசியல் ஒரு சாக்கடை என்பார்கள் எமது மூதாதையர்கள். சாக்கடை என்பது ஒரு தொழில் களம். இந்தச் சாக்கடையைச் சுத்தப்படுத்தும் தொழிலை புரிபவர்கள் ஆண்கள். எனவே அரசியலிலும் அதிகம் பிரவேசிப்பது ஆண்கள்தான். அரசியலை அப்படியே உடைத்தால் அரசி + இயல் . அரசி என்பது பெண். இயல் என்பது இயலாமை. எனவே பெண்களால் இயலாததுதான் இந்த அரசியல்.
இன்று பெண்கள் அரசியலில் இருக்கலாம். அவர்களும் இந்தப் புல்லுக்கு ஒப்பானவர்கள். இவர்கள் இடையிலே பிடுங்கி வீசப்படுவர். ஆனால் என்றுமே தமது ஆயுள் காலம் வரை நிலைத்து நிற்கும் நெல்லைப் போன்றவர்கள் ஆண்கள். எனவே ஆண்கள்தான் அரசியலில் அதிகம் பிரவேசிக்கின்றனர். அவ்வாறு பிரவேசித்தால் தொடர்ச்சியாக அந்த இடத்தை தக்க வைப்பதும் ஆண்கள்தான். அவர்களால்தான் அது முடிகிறது. பெண்களால் முடிவதில்லை.

அரசியல் ஒரு சாக்கடை என்பார்கள் எமது மூதாதையர்கள். சாக்கடை என்பது ஒரு தொழில் களம். இந்தச் சாக்கடையைச் சுத்தப்படுத்தும் தொழிலை புரிபவர்கள் ஆண்கள். எனவே அரசியலிலும் அதிகம் பிரவேசிப்பது ஆண்கள்தான். அரசியலை அப்படியே உடைத்தால் அரசி + இயல் . அரசி என்பது பெண். இயல் என்பது இயலாமை. எனவே பெண்களால் இயலாததுதான் இந்த அரசியல்.

சந்திரன், தொல்புரம்

# எனக்குப் பிடிக்கும்

அறிவாளிகளோடு உரையாடப் பிடிக்கும்
யன்னலோர இருக்கையில்
இருந்துகொண்டே
பாடல் கேட்டுக்கொண்டு - வயல்
வெளிகளினூடே
பஸ்ஸில் பயணிக்கப் பிடிக்கும்
இதிகாசக் கதைகள் வாசிக்கப் பிடிக்கும்
சோலையில் உலாவப் பிடிக்கும்
சிறுவர்களோடு சேர்ந்து விளையாடப்
பிடிக்கும் இறைவனோடு மௌனமாய்
பேசப் பிடிக்கும். நான் யாரென்று தேடும்
என் தேடல் பிடிக்கும்
உலகத்தை நேசிக்கப் பிடிக்கும்
அண்ணன்களுக்காக உயிரையும்
கொடுக்கப் பிடிக்கும்



மயூரி.கனகரட்ணம்,
கைதடிச் சந்தி.

## பதிலுக்காய் எதிர்பார்த்து

வானத்தில் நின்று பூமியைப்
பார்த்து பூமியில் வாழ
ஆசைப்பட்டேன்
தூரத்தில் நின்று உன்னைப்
பார்த்து உனக்குள் வாழ
ஆசைப்பட்டேன்- நான்
உனக்குள் வாழ வழி இல்லை
அதனால் உன்னை
எனக்குள் வைத்தேன்

என்.சாளினி, கனகராயன்குளம்.




## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................
முகவரி :- ..........................................................
..........................................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# புனர் ஜென்மம் பெற்றன முத்துஜயன் வீதிகள்

முல்லைத்தீவு.ஓக.22
நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது போக்குவரத்தில் பெரும் இடர்களை ஏற்படுத்தி வந்த முத்துஜயன் கட்டு முதலாம், இரண்டாம் கண்டத்திலுள்ள பாடசாலை வீதியின் புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்து மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.
மீள் எழுச்சித் திட்ட முன்னாள் பணிப்பாளர் ந.நவரட்ணராசா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.
நீண்டகாலமாக இந்த வீதியானது புனரமைக்கப்படாததால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வந்தனர்.
கடந்த 16 ஆம் திகதி முத்து விநாயகபுரம் கமக்கார அமைப்பினரின் அனுசரணையுடன் கிராம அலுவலர் ரி.தயாபரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கல விளக்கை மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் க.ரட்ணராசா, ஜனாதிபதியின் முல்லை மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.
வீதியை முன்னாள் கிராம அலுவலர் எஸ். சோமசுந்தரம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் விருந்தினர்களுடன் கமக்கார அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
(க-500)



அக்கராயன் மருத்துவமனைக்கும், அம்பலப்பெருமாள்குளம் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் அதிகாரிகளின் கண்களுக்கு இதுவரை தென்படாத நிலையில் உடைந்து சேதமடைந்து காணப்படும் மதகு. (க-18)

# பாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு பெரும் இடர்கள்

முல்லைத்தீவு.ஓக.22
விவசாய நிலங்களுக்குச் செல்லும் பாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் முல்லை மாவட்ட விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.
ஆண்டாண்டு காலமாக இங்குள்ள விவசாயிகள் உபயோகித்து வந்த தமது விவசாய நிலங்களுக்குச் செல்லும் பாதைகள் சிலரால் தமது காணிகளுடன் சேர்க்கப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிய வருகின்றது. இதனால் விவசாயிகள் தமது காணிகளுக்கு விவசாயத் தேவைக்கென உரம் கொண்டு செல்வதற்கும், நெல்லை அறுவடை செய்து எடுத்து வருவதற்கும், இயந்திரங்களைக் கொண்டு செல்வதற்கும் தடைகள் ஏற்பட்டுள்ளன.
இது தொடர்பாகக் கமநல சேவை நிலைய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
(க-500)

# மல்லாவி சந்தைக்கு மாடிக் கட்டடம்



துணுக்காய். ஓக.22
துணுக்காய்ப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மல்லாவி பொதுச் சந்தைக்கு இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.
புறநெகும வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 27 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் அனுசரணையுடன் துணுக்காய் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இந்தக் கட்டட வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.
கட்டட வேலைகளை துணுக்காய்ப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-415)

தாழ்ந்த நிலங்களில் வாழுகின்ற மக்களுக்கு

# மாற்றுக் காணி வழங்குவதில் தாமதம்

அக்கராயன்.ஓக.22
அக்கராயன்குளம் வான்பாயும் போது பாதிக்கப்பட்டு வரும் அங்குள்ள தாழ்ந்த நிலங்களில் வாழும் மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக அவர்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.
குறிப்பாக கண்ணகைபுரத்தின் தாழ் நிலப்பகுதியில் வாழுகின்ற மக்கள் பாதுகாப்பான இடத்தில் தாம் வீடுகளை அமைக்கும் பொருட்டு தமக்குரிய காணிகளை இனம் காட்டுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
அக்கராயன்குளம் வான்பாயும் போது தாழ்ந்த நிலப்பகுதியில் வாழ்கின்ற தாம் ஆண்டு தோறும் அவலங்களை எதிர்கொள்வதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.
ஏற்கனவே பிற இடங்களில் தமக்குக் காணி வழங்கப்பட்டு நிரந்தர வீடுகளும் அமைக்கப்படுமென அதிகாரிகள் உறுதிமொழி வழங்கிய போதிலும் இதுவரை அந்தக் காணிகள் இனம் காட்டப்படவில்லை எனவும் இந்த மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-18)

**"கண்ணகைபுரத்தின் தாழ் நிலப்பகுதியில் வாழுகின்ற மக்கள் பாதுகாப்பான இடத்தில் தாம் வீடுகளை அமைக்கும் பொருட்டு தமக்குரிய காணிகளை இனம் காட்டுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

# வவுனியாவில் செவ்விளநீருக்கு கிராக்கி

வவுனியா.ஓக.22
வவுனியாவில் செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இங்குள்ள ஏ-9 வீதியில் உள்ள பிறவுன் கம்பனி, நொச்சிமோட்டைப் பாலம், தாண்டிக்குளம் புகையிரத நிலையம், ஓமந்தை பெற்றோல் நிரப்பு நிலையம் ஆகிய இடங்களுக்கு அருகில் மரங்களின் கீழ் செவ்விளநீர் வியாபாரம் அமோகமாக இடம்பெற்று வருகின்றது.
கொழும்பு, கண்டி, திருகோணமலை உட்பட பல்வேறு தூர இடங்களிலும் இருந்து வரும் பயணிகள் தமது வாகனங்களில் இருந்து கீழே இறங்கி இளநீரைப் பருகுவதில் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.
இதேவேளை இங்குள்ள படையினரும் அதிகளவில் இளநீர் பருகுவதைக் காணமுடிகின்றது.
ஒரு இளநீர் 40 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்குள் நூற்றுக்கணக்கான பயணிகள் வருகை தருவதால் இளநீர் விற்பனை களைகட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)




# சோற்றுப் பானையையும் விட்டு வைக்காத யானைகள்

முல்லைத்தீவு. ஓக.22
முல்லைத்தீவு மாவட்டம் முத்துஜயன் கட்டுப் பகுதியில் அட்டகாசம் புரியும் யானைகளில் ஒன்று அங்குள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த சோற்றுப் பானையையும் கொண்டு சென்றுள்ளது.
முத்துஜயன்கட்டுப் பகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. கடும் வறட்சி நிலவுவதால் முத்து ஜயன் கட்டுப் பகுதியில் நீர் அருந்த வென குளத்தை நாடும் காட்டு யானைகள் அங்கு செய்கை பண்ணப்பட்ட விவசாயத்தை அழித்து வருகின்றன. சுமார் மூன்று ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டிருந்த விவசாயம் முழுமையாக யானைகளால் அழிக்கப்பட்டன.
அண்மையில் வீடொன்றில் புகுந்த யானைகள் அங்கிருந்த பொருள்களைச் சேதப்படுத்தியதுடன் சோற்றுப் பானையையும் காவிச் சென்றுள்ளன. இதனால் மக்கள் இரவில் நித்திரையின்றி விழித்து அச்சத்துடன் இருப்பதைக் காண முடிகின்றது.
(க-500)

# இராணுவத்தின் குழாய்க் கிணற்றால் வறண்டு காய்ந்தது வீட்டுக் கிணறு

துணுக்காய். ஓக.22
இராணுவத்தினர் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்ததால் தனது வீட்டுக் கிணறு நீர் முற்றாக வற்றிவிட்டது என்று கிராமவாசி ஒருவர் முறையிட்டுள்ளார்.
துணுக்காய் ஆலங்குளம் கிராமத்தில் வசிக்கும் காத்தலிங்கம் கணேசபிள்ளை என்பவரின் வீட்டுக் கிணற்றுக்கே இந்தக் கதி ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பாக கணேசபிள்ளையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது: எனது குடும்பம் ஆலங்குளம் பகுதியில் வசித்து வருகின்றது. 2004ஆம் ஆண்டு கட்டப்பட்ட எமது வீட்டுக் கிணற்றில் நீர் எப்போதும் நிறைந்து காணப்பட்டதால் இங்குள்ள நிலத்தில் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டோம். இதற்குரிய நீரை இந்தக் கிணற்றிலிருந்து பெற்று வந்தோம். பயிர்ச் செய்கை மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் எனது குடும்பம் தங்கியிருந்தது.
போரின்போது இடம்பெயர்ந்து 2009 ஆம் ஆண்டு திரும்பி வந்தபோதும் கிணற்றில் நீர் காணப்பட்டது. அண்மையில் எமது வீட்டிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள இராணுவத்தினர் ஆழ்துளைக் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்து அதிலிருந்து நீரைப் பெற்று வருகின்றனர். குழாய்க்கிணறு அமைக்கப்பட்ட பின்னர் எமது கிணற்று நீர் முற்றாக வற்றிவிட்டது. இதனால் குடிதண்ணீர் தேடி நாங்கள் நீண்ட தூரம் அலைந்து செல்லவேண்டியுள்ளது.
இது தொடர்பாக முகாமுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி, துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோருக்கு நாம் முறையிட்டபோதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் கிணற்று நீரை நம்பிய எமது விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எமது வேறு தேவைகளுக்குரிய நீருக்கும் அல்லல்களை எதிர்கொண்டு வருகின்றோம் என்று கவலையுடன் தெரிவித்தார்.
(க-415)



# அரபா நகர் வீதிகள் படு மோசம்

வவுனியா,ஓக.22
அரபா நகரின் பெரும்பாலான வீதிகள் மோசமாகப் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றன. பூவரசங்குளம், பம்பைமடு ஆகிய பகுதிகளில் இருந்து அரபாநகருக்குச் செல்லும் வீதியும் இராசேந்திரம்குளம் வீதியூடாக இங்கு செல்லும் வீதியும், இவற்றுக்குக் குறுக்காகச் செல்லும் வீதியும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளன. இதனால் அரபா நகரிலுள்ள பாடசாலைக்குச் செல்லும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மழை காலத்தில் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.
தற்போது அரபா நகரை அண்மித்துப் பல குடியேற்றங்கள் இடம்பெற்று வருவதால் கனரக வாகனங்கள் அதிகளவில் செல்வதனால் வீதிகள் சேதமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-402)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்**: திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**இடபம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்**: திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கடகம்**: புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**சிங்கம்**: சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**கன்னி**: வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**நாளை**

ஆவணி-07 வெள்ளிக்கிழமை 23.08.2013
திதி: திருதியை பி.இ.04.15 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.ப.11.55 வரை
சுபநேரம்: 06.05 - 07.35 வரை
இராகுகாலம்: 10.35 - 12.05 வரை

**துலாம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சிகம்**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை அதிகரிப்பீர்கள்.

**தனுசு**: எண்ணம்போல் செயற்பட வேண்டும் என எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மகரம்**: பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்களால் பணஉதவி கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

**கும்பம்**: சாதாரணமாகப் பேசப்போய் சண்டையில் முடியும். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**மீனம்**: விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | 1 | 5 | 9 | | |
| 2 | | | 4 | 8 | | | 7 | |
| 1 | 4 | | | | 9 | | 6 | |
| 5 | | | | | | | 8 | |
| 7 | | 1 | | | | 2 | | 6 |
| | 6 | | | | | | | 7 |
| | 1 | | 3 | | | | 5 | 9 |
| | 5 | | | 7 | 8 | | | 3 |
| | | 8 | 9 | 5 | 6 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 9 | 6 | 8 | 7 | 1 | 9 | 4 |
| 4 | 8 | 1 | 3 | 2 | 5 | 9 | 7 | 6 |
| 6 | 7 | 5 | 9 | 4 | 1 | 3 | 2 | 8 |
| 7 | 9 | 8 | 4 | 1 | 3 | 4 | 9 | 2 |
| 5 | 1 | 3 | 2 | 6 | 8 | 8 | 3 | 7 |
| 2 | 6 | 4 | 7 | 5 | 9 | 8 | 3 | 1 |
| 8 | 3 | 7 | 1 | 9 | 2 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 2 | 5 | 3 | 6 | 7 | 8 | 9 |
| 9 | 5 | 6 | 8 | 7 | 4 | 2 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# யா/செங்குந்த இந்துக் கல்லூரி

## உப அதிபர்

## திருமதி ஜெகதாம்பிகை கலாதரன் (SLTS-I) அவர்களின்

# சேவைநலன் பாராட்டு – 22.08.2013



உபஅதிபர்- திருமதி ஜெகதாம்பிகை கலாதரன்
(B.A,Dip.in.Ed. SLTS-I)
பெற்றோர் - சபாபதி கதிரமலை
(முன்னாள் தலைமை ஆசிரியர் KKS TMS)
கதிரமலை - தவமணி
பிறப்பிடம் - கீரிமலை, பிறப்பு - 1953.08.22
வாழ்விடம் - திருநெல்வேலி கிழக்கு
துணைவர் - வாதவூரர் கலாதரன் (ஓய்வுநிலை, பிரதேச செயலகம் நல்லூர்)
ஆரம்பக் கல்வி - யா/நகுலேஸ்வரா மகா வித்தியாலம்
இடைநிலைக் கல்வி- யா/மகாஜனக் கல்லூரி
பட்டப்படிப்பு பேராதனை பல்கலைக்கழகம்,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா - தேசிய கல்வி நிறுவகம்

**சேவை விவரம்**

ஆசிரியர் பு/புத்தளம் இந்துக் கல்லூரி -1984-1989
ஆசிரியர் யா/நகுலேஸ்வரா மகா வித்தியாலம் -1989-1992
பதில் அதிபர் யா/நகுலேஸ்வரா மகா வித்தியாலம் -1992-1994
ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி -1994-1997
ஆசிரியர் யா/செங்குந்த இந்துக் கல்லூரி -1997-2011
உபஅதிபர் யா/செங்குந்த இந்துக் கல்லூரி -2011-2013

**பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**



திருமதி ஜெகதாம்பிகை அவர்கள் செங்குந்த இந்துக் கல்லூரியில் பதினாறு ஆண்டுகள் மட்டுமே பணி புரிந்தாலும் தனக்கென ஓர் இடத்தை அப்பாடசாலையில் பதித்துள்ளார். பாடசாலையின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை கட்டிக் காப்பாற்றுவதில் இவர் ஆற்றிய பங்கு மகத்தானது. இதனாலேயே குறுகிய காலத்தில் இப்பாடசாலையில் உபஅதிபர் பதவி இவரை தேடி வந்தது. இன்று ஓய்வுநிலை பெற்று பாட சாலையை விட்டு நீங்கினாலும் இவர் பெயர் பாடசாலையில் நிலைபெறும் என்பது திண்ணம். இவ்வேளை யில் இவர் எதிர்காலம் வளம் பெற இறைவனை வேண்டுகின்றேன்.

கோ. வரதராஜமூர்த்தி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,(கல்வி நிர்வாகம்)
பழைய மாணவன்
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

**SHC OSA கனடா கிளை தலைவரின் வாழ்த்துச் செய்தி**



நாம் புலம் பெயர் நாட்டில் வாழ்ந்தாலும் எமக்கு ஆரம்ப அறிவையும், நற்குணங்களை யும் கற்றுத்தந்த இந்தக் கல்லூரியை நாம் எக்காலமும் மறக்க முடியாது. அதேபோல் இக்கல்லூரிக்கு அரும்பணியாற்றியவர்கள் வரிசையில் ஜெகதாம்பிகை கலாதரன் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் முன்னேற்றத்துக்கும் அயராது உழைத் தவர். இவரது சேவைக்காக நன்றியையும் நல்வாழ்த்துக் களையும் யா.செ.இ. கல்லூரி ப.மா.ச. கனடா கிளையின் சார்பில் தெரிவித்துக் கொள் கின்றேன்.

ராம் - விசுவநாதபிள்ளை (B.Sc),தலைவர்,செங்குந்த இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம், கனடா கிளை.

**அதிபரின் வாழ்த்து**



இவரது 29 வருட கல்விப் பணியில் 16 வருடத்தை எமது பாடசாலை பெற்றுள்ளது. இவர் சிறந்த ஆசிரியரும் நிர்வாக ஆற்றலும் கொண்டதுடன் அமைதியான சுபாவமும் எளிமையான வாழ்க்கை முறையும் கொண்டவர். ஆயினும் அநீதிகளை தட்டிக் கேட்க தயங்காதவர். இவர் இக்கல்லூரியின் அபிவிருத்திக்காக பூரணமான பங்களிப்பினை வழங்கியதுடன் மாணவர் நலன்புரி சேவையிலும் ஆர்வமாக செயற்பட்டார். இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

இரத்தினம் பாலகுமார்
அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி.
தலைவர், பழைய மாணவர் மன்றம், யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

**மாணவர்களின் வாழ்த்து**

எமது வகுப்பாசிரியராகவும் பாட ஆசிரியராகவும் இருந்து எம்மை வழி நடத்தியதுடன் இப்பாடசாலை வளர்ச்சியடைவதற்கு அயராது உழைத்தவர். இவரது பணி சிறப்படைய வாழ்த்துவதுடன் இன்னும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

கோ.பிரதீபன், கு. விமலன்,
கு. வேதகிரீஸ்வரன், யோ.பகீரதன், சீ.கணேஸ்குமார்,
கோ. மதனகோபன்
பழைய மாணவர் A/L 2000
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

**வாழ்த்தும் அன்பர்கள்**
**KANNA STUDIO**
*Photo video (Colombo & Jaffna)*
Tel: 011 480 1927, 077 748 2107, 077 075 9511
சட்டநாதர்வீதி, நல்லூர்.
Kannastudio@yahoo.com
www.kannastudio.com

**அறுபதில் ஒரு சிறுக்கு...**
அகவை அறுபதில் தகைமைகள் பலகொண்ட
தரமான ஆசானாய் பகுதித் தலைவியாய்
பிரதி முதல்வராய் பன்முகம் கொண்டவரே!
அன்புத் தாயாய் அறிவுத் தாதியாய்

அழகுத் தோழியாய் தோளோடு தோள்நின்று-பள்ளியில்
நாளும் உழைத்தவர் எங்கள் கலாதரன் மிஸ்!
பிள்ளைகள் வழியில் பிரியமுடன் நடந்து -இதயத்தில்
பிரியாத உறவாய் - August 22இல்
பிரிய நிற்கும் எங்கள் ஆசான்!

நியாயத்தை நிமிர்ந்தே நேரிடை செய்யும்
நாநயம் உள்ள எங்கள் உப அதிபர்!
எங்கும் நீங்கள் எல்லாம் பெற்று
ஏற்றமுடன் நீங்கள் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நல்லுறவு மன்றம், யா/செங்குந்த இந்துக் கல்லூரி

(39027) (5.6.3)

★★★★★★ஆசிரியர் நல்லுறவு மன்றமும் பழைய மாணவர்களும், யாழ் செங்குந்த இந்துக் கல்லூரி.★★★★★★

சுயதொழில் ஒய்வூதியத் திட்டம்

# கிளிநொச்சியில் ஜூலை வரையில் இணைந்தோர் தொகை 372 பேர்

கிளிநொச்சி, ஓக. 22
இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுரக்கும் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இணைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமூக சேவைகள் அலுவலர்கள், கிராம அலுவலர்களின் பங்களிப்புடன் அதிகமானோர் இணைகின்றனர்.

மாவட்டத்தில் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் ஜூலை மாதம் வரை 372 பேர் இணைந்துள்ளனர். கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் இந்தத் திட்டத்தில் அதிக பயனாளிகளை இணைப்பதற்கு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடமாடும் சேவைகளை நடத்தி வருகிறார்.

கடந்த 15 ஆம் திகதி வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தியதாகவும் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பொன்னகர் கிராம அலுவலர் பிரிவிலும், முற்பகல் 10 மணிக்கு மலையாளபுரம் கிராம அலுவலர் பிரிவிலும் நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டாவளைப் பிரதேசத்திலும் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளை இணைப்பதற்கான நடமாடும் சேவைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடத்தப்படவுள்ளதாக பிரதேச செயலர் த.முகுந்தன் தெரிவித்தார். (வ-9)

# சமூக சேவைகள் அமைச்சால் உதவி

## தந்தை அல்லது தாயை இழந்த மாணவரின் குடும்பங்களுக்கு

கிளிநொச்சி, ஓக.21
தந்தை அல்லது தாயை இழந்த பாடசாலை மாணவர் களைக் கொண்ட வறிய குடும் பங்களுக்கு சமூக சேவைகள் அமைச்சினால் சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கரைச்சி பிரதேச செயலர் பிரி வில் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 35 குடும்பங்களில் 7 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களைக் கொண்ட குடும்பங்களின் வாழ் வாதாரத்தை உயர்த்துவதன் ஊடாக மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்த முடி யும் என்ற நோக்குடன் இந்தத் திட்டம் சமூக சேவைகள் அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இத்தகைய குடும்பங்கள் மரணச் சான்றிதழினையும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமாதான நீதிவானி டம் பெறப்பட்ட கடிதத்தினை யும், பாடசாலை செல்லும் மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதி யினையும் இணைத்து விண் ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். கால்நடை வளர்ப்பு, சிறு வியா பாரம் போன்ற சுயதொழில் களை விடுத்து சாத்தியமான வேறு கைத்தொழில் களை மேற் கொள்ளும்பொருட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்ப வர்களுக்கு முன்னுரிமை அடிப் படையில் சுயதொழில் உதவி கள் வழங்கப்படும்.

உரிய ஆவணங்களுடன் கிராம அலுவலரின் பரிந்துரை யுடனும் பிரதேச செயலக சமூக சேவை கள் பிரிவுடன் தொடர்பு கொண்டு உரிய படிவங்க ளைப் பெற்று விண்ணப்பிக் குமாறு கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (க-9)

# பல்கலை மாணவர் 82 பேருக்கு உதவி

யாழ்ப்பாணம், ஓக.22
அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மனித நேய நிதியத்தின் ஊடாக யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 82 மாணவர்களுக்கு கல்விக்கான உதவிக் கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களது கல்விக்கு தேவையான நிதியாக மாதாந்தம் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மாணவர்களது தற்போதைய தேவைக்கேற்ப 2 மாணவர்களுக்கு மாதாந்தம்8 ஆயிரம் ரூபாவும் ஏனைய மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் ஏற்கனவே மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா எனும் அடிப்படையில் உதவித் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. எனினும் தற்போது மாணவர்களின் தொகைக்கு ஏற்ப 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. மனித நேய நிதியத்தின் ஊடாக வழங்கப்பட்டுவரும் இந்த கொடுப்பனவால் மாணவர்கள் நன்மையடைந்துள்ளனர். இந்த மாதாந்தக் கொடுப்பனவு பல்கலைக் கழக மாணவர்களது கற்றல் இறுதிக் காலம் வரை வழங்கப்படவுள்ளது. (வ-14)

**பதவி வெற்றிடங்கள்**
கட்டுமானத் துறையில் ஈடுபட்டுவரும் நிறுவனம் ஒன்றில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உண்டு.
1) கணக்காளர்
2) Project Manager
3) வாகன சாரதி
4) களஞ்சியக் காப்பாளர்
5) சட்டறிங் வேலை தெரிந்தோர்
6) மேசன் வேலை தெரிந்தோர்
7) கூலி ஆள்கள்
8) Clerk
9) Safety Officer
10) Office Assistant
*Kumaran Builders*
26, மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
உடுவில் வடக்கு, சுன்னாகம். (39036)
Kumaranbuilders@yahoo.com (12.3,8)

## நடமாடும் சேவை கரவெட்டியில்

யாழ்ப்பாணம், ஓக. 122
கபே அமைப்பின் அனுசரணையுடன் ஆள் பதிவுத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கான தேசிய அடையாள அட்டை பெறுதலுக்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (வ-14)

**விற்பனைக்கு**
9ஸ்ரீ XXXX இலக்கமுடைய
மைனர் கார்
விற்பனைக்குண்டு. (29627) (11.3.6)
தொடர்பு:
077 610 5838, 077 506 4212

# துரிதமாக புனரமைக்கப்படும் ஓமந்தை வீட்டுத் திட்ட வீதிகள்



வவுனியா, ஓக.22
ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்குரிய வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உதவியுடன் இங்குள்ள சில குறுக்கு வீதிகள் முதற்கட்டமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கென பெருமளவு கிரவல் மண் குவிக்கப்பட்டு வருகின்றது. வீதிகளும் குறுக்காக மதகுகள் அமைக்கப்பட்டு மழை காலத்தில் நீர் வடிந்தோடுவதற்கு ஏற்ற வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்தமாத இறுதிப் பகுதிக்குள் மின்சாரம் வழங்கப்படுவதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் அறிய முடிகின்றது.

இங்கு காணிகள் வழங்கப்பட்ட அனைத்து அரச ஊழியர்களும் வீடுகளை அமைத்து முடித்து விடுவார்களாயின் விரைவில் அனைத்து வீடுகளிலும் மின்சாரம் ஒளிரும் என இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் மின்சார சபையால் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கென பிரத்தியேகமாக மின்பிறப்பாக்கியொன்று பொருத்தப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. எனவே மின்சா ரம் வழங்கப்படுவதற்கு ஏதுவாக மழைகாலத்துக்கு முன்னர் இங்குள்ள வீதிகளைப் புனரமைக்க வேண்டுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வீதிகள் அமைப்பதற்கு ஏதுவாக வனப் பாதுகாப்பு அதிகாரசபையினர் காடுகளை விடுவித்து உத்தியோகபூர்வமாக அனுமதியை வழங்க வேண்டும் என்பது வவுனியா தெற்கு பிரதேச சபையினரின் எதிர்பார்ப்பாகும். எதிர்வரும் மழைகாலத்துக்கு முன்னர் வீதிப் புனரமைப்பு இடம்பெற்று மின்சாரமும் வழங்கப்பட்டு விட்டால் அனைத்து வீட்டுத்திட்டப் பயனாளிகளும் இங்கு குடியமரும் சாத்தியம் உள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-402)

**யாழ் மண்ணில் முதல் முறையாக**
**கனரக இயந்திர வாகனங்களான**
**JCB, Excavator, Dozer மற்றும்**
**Fork Lift பயிற்சி வகுப்பு**
**26.08.2013 இல் ஆரம்பமாகிறது.**



* பயிற்சிக்காலம் - 30 Days
* வரையறை அற்ற வேலைக்கள பயிற்சி அளிக்கப்படும்.
* இப்பயிற்சிக்கு சாரதி அனுமதிப்பத்திரம் தேவையில்லை.
* பயிற்சி நிறைவில் எமது சான்றிதழுடன் சிறிலங்கா அரச சான்றிதழும் வழங்கப்படும்.
* 16 வயதுக்கு மேற்பட்ட எவரும் பயிற்சி வகுப்பில் பங்குபற்றலாம்.
* தங்குமிட வசதி, பாதுகாப்பு அங்கி, தலைக்கவசம், மருத்துவ வசதி மற்றும் விளையாட்டு வசதிகள் அளிக்கப்படும்..
* வாகன திருத்தும் அறிவு
* பயிற்சிக்குழுவில் ஆகக்கூடிய பயிலுனர் எண்ணிக்கை 20



(39102)(10.6.3)
தொடர்புகளுக்கு:
**NORTHERN TECH CENTER**
Heavy and Light Earth Moving Equipment
TRAINING and TESTING Centre
"Leelapathy" Kandy Road, Mirusuvil, Jaffna, Srilanka.
(மிருசுவில் வைத்தியசாலைக்கு அருகில்)
Telephone No: 071 4167878, 072 226 3778, 072 246 2517

## அபராதம்

தென்மராட்சி, ஓக. 22
ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய சுன்னாகம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாரதிய அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வாகன வரி ஆகிய ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய வேளையில் சாவகச்சேரி பொலிஸாரிடம் அகப்பட்ட நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது விசாரணை மேற் கொண்டபதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மூன்று குற்றங்களுக்குமாக 11 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

சாவகச்சேரி நீதிமன்றில் போக்குவரத்து விதிகளை மீறிய 16 பேருக்கு அபராதம் நேற்று விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

**சுஜித் என்ரபிறைசஸ்**
டச்சு வீதி, சாவகச்சேரி
**தேவை**
1. பணம் வசூலிப்பாளர்-மாதாந்த வருமானம் ரூபா 35,000/= - ரூபா 40,000/=
2. சாரதி- சிங்களம் தெரிந்த AD சாரதிய அனுமதிப் பத்திரம் உள்ளவர்
3. பொருள்களுக்கான ஓடர்களைப் பெற்றுத் தரக் கூடிய குழு (Order Team)
தொடர்பு: 021 227 0586
(c/2738)(11.3)

**ஸ்ரீவல்லிபுரஆழ்வார் சுவாமி கோயில்**
துன்னாலை வடக்கு, புலோலி.
**மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல்**
இவ்வாலய மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ்வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் 28.08.2013 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் காலை 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப் பணத்தினை அன்றைய தினமே முழுமையாக செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
★ *ஐஸ்கிறீம் கடை* ★ *இனிப்புக்கடை*
★ *கச்சான் கடை* ★ *புடைவைக்கடை*
(சி/11440) (7.6.3)
T.P: 021 321 0983 அறங்காவலர் சபை.

# 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.11.1936

மறைவு
26.08.1983

## திருமதி தியாகராசா மாணிக்கம்

திதி: துதியை

ஐயிரு கண்கள் சுற்றி - எங்கள்
அகல் ஒளி அம்மாவுன்னை....
தேடியே.... நொந்து.... நொந்து....
தேவியே.... காணாவுள்ளம்....
வாடுதே அம்மா இன்னும்
வந்திடாத் தூரம் நீபோய்....

கணமதும் நிமிடமாகி....
கடந்தது மணியதாகி....
நாளதும் வாரமாகி.... அது
நடந்து மெல் மாதமாகி....
ஓதிட வருடமாகி....
ஒப்பிலாத் தாயே எம்மை....

காணுற வாரா வேளை
காணுவோம் என்றே நாமும்...
ஓர்சிறு கனவுதானும்
ஓர்பொழுதறிந்தோமில்லை....

மாளுதே அம்மா.... ஐந்து
மலரதாம் உள்ளம் இங்கே
தேறிட வழியுமின்றி - எம்மைத்
தேற்றிட வகையுமின்றி....
போகுதே அம்மா தெய்வ
பொற்பதம் பெற்ற அம்மா....
ஆறுதல் தந்து அங்ஙண்
அமைதி கொள் தாயே.... அம்மா....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்
**தியாகராசா துவாரகேஸ்வரன் குடும்பத்தினர்.**

229,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ஈஸ்வரன் ரேடர்ஸ்
ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ்
ஈஸ்வரன் ரேடிங் கம்பனி
ஈஸ்வரன் கூரியர் சேவிஸ்
ஈஸ்வரன் போக்குவரத்து சேவை

(C/11452)(12,6,3)

அன்னாரின் நினைவாக இன்று (22.08.2013) வியாழக்கிழமை நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
26 ★ 10 ★ 1942

விண்ணில்
11 ★ 09 ★ 1995

**அமரர்- முருகேசு கனகசபை**
(ஆசிரியர்)

திதி: ஆவணி அபரபக்க துதியை

ஆண்டு பல சென்றிடினும்
மாண்பு பல பெறும் போது
நீங்கள் இல்லை என்றே ஏங்குகின்றோம் அப்பா!
உங்கள்ஆசியும் உங்கள் நினைவும்
என்றும் எமக்கு வழிகாட்டுமப்பா

கைதடி -நுணாவில்,
சாவகச்சேரி.

(39046(6.11)

குடும்பத்தினர்.

# நல்லூர் ஆலயச் சூழலில்



யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் கந்தன் ஆலய பதினோராம் திருவிழாவான இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் 'உமையாள் பயந்த இலஞ்சியம்' என்ற பொருளில் கு.பாலசண்முகன் சிறப்புச் சொற்பொழிவும், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் அறநெறிப் பாடசாலை, புத்தூர் ஈஸ்வரன் அறநெறிப் பாடசாலை, மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது. இசை அரங்கில் பாடல்களை கிருஷ்ணப்பிரியா ஆனந்தராஜா, வழங்க, அணிசேர் கலைஞர்களாக வயலின்- எஸ்.கோபிதாஸ், மிருதங்கள்- எம்.சிதம்பரநாதன், கடம்- ஆர்.ரகுநந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் மாலை 6.30 மணிக்கு திருமதி மதுமிதா பிரதீபா சர்மாவின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறும் தெய்வீகத் தொடர் மகாபாரத இசைப் பேருரை இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'பீஷ்மர் சபதம்' பற்றி இசைப் பேருரையை நிகழ்த்துவார். (ந-86-7-14)

# எமது உண்மையான இயல்பை நாம் எவ்வாறு கண்டறியலாம்?

பற்றினையும், துவேச வெறுப்பையும் நாம் களைந்து விட்டால் எமது உண்மையான இயல்பை நாம் கண்டு கொள்ளலாம்.

பற்றும் வெறுப்பும் எம்மிடமுள்ள ஆனந்தத்தை மறைக்கும் தடித்த ஆடைகளாகும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

# பயன்பெற்றனர் 995 பேர் நடமாடும் சேவையில்

நவாலி, ஓக.22

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த 15ஆம் 16 ஆம் திகதி ஆகிய இருநாள்கள் நடைபெற்ற நடமாடும் சேவையில் 995 பேர் பயனடைந்துள்ளனர்.

பிரதேச செயலர் முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சேவையில் வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் செல்வி ஆனந்தியும் கலந்துகொண்டார். இதன்போது 136 பேருக்கு காலங்கடந்த பிறப்புச் சான்றிதழையும், 29 பேருக்கு திருமணப் பதிவுச் சான்றிதழையும் 3 பேருக்கு இறப்புச் சான்றிதழையும் வழங்கியுள்ளார்.

மேலும் 827 பேர் தேசிய அடையாள அட்டைக்கான பதிவினையும் மேற்கொண்டனர். (ந-100)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
17.03.1946

விண்ணில்
09.09.2006

**திருமதி அன்புமலர் பேரின்பநாயகம்**

உங்கள் அன்பான நினைவுகள்
எம் நெஞ்சில் நிலைக்குதம்மா
தெய்வமாய் நீர் இருந்து காத்திடுவீர்
ஆண்டுகள் ஏழு கடந்த போதும்
உங்கள் இனிய நினைவுகளுடன்
வாழுகின்றோம்.

(C/11442)(12)(3.6)

உங்கள் நினைவில் வாழும்
கணவர், மகள்மார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்: மலரவன், கவிநயா.

மட்டுத்தடி வீதி,
கொடிகாமம்.

# பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஓக.22

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். கழகத் தலைவர் இ.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு தென்மராட்சி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் பீ.சக்திவேல், கிராம அலுவலர் ப.நிரஞ்சன், முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு.நாகராசா, கழக அமைப்பாளர் பொ. நவரத்தினம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ந-9)

# அந்தியேட்டி அழைப்பு

**கந்தையா சின்னத்தம்பி**



அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் எதிர்வரும் 22.08.2013 இன்று காலை 5.00 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்திபெற வேண்டுவதோடு அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"வாணி இல்லம்"
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் Lion நல்லதம்பி
சோமசுந்தரம் (J.P)

தோற்றம்
14.06.1939



மறைவு
08.07.2013

கடந்த 08.07.2013 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச்செய்திகேட்டு எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியோர், உதவி ஒத்தாசை புரிந்தோர், துண்டுப்பிரசுரம் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று (22.08.2013) வியாழக்கிழமை TCT மண்டபத்தில் நடைபெறும் ஐக்கிய மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)


(39017)(15.3.8)

59/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

—குடும்பத்தினர்—

113, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04.07.1945

உதிர்வு
15.08.2011

**அமரர் அருளையா ஜெயேந்திரன்**

ஆண்டுகள் இரண்டு ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு போனாலும்
ஐயா எங்களோடுதான் என்றும் வாழ்ந்திடுவீர்கள்
வருடங்கள் பலவானாலும்......

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(#11451)(45.8.5)

## உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம்

டயகம ஐந்தாம் பிரிவிலுள்ள ஆற்றுப் பகுதியிலிருந்து உருக்குலைந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய ஞாயிறு காலை 7.30 அளவில் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் ஆற்றில் அடித்து செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். பெண் தொடர்பான தகவல் இதுவரை தெரியவரவில்லை. சடலம் தொடர்பில் டிக்கோயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## வாகன விபத்தில் தந்தை சாவு தாய் 3 பிள்ளைகள் காயம்

கொழும்பு. ஓக.22

கலேவெல பொலிஸ் பிரிவின் அபேபுஸ்ஸ - திருகோணமலை வீதியில் வெலிகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில். ஒருவர் உயிரிழந்துள்ளதோடு 3 சிறுவர்கள் உள்ளிட்ட நால்வர் காயமடைந்துள்ளனர்.

குருநாகலில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணம் செய்த டிப்பர் வாகனம். தம்புள்ளையில் இருந்து குருநாகல் நோக்கி பயணித்த வான் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த வான் சாரதி கலேவேல வைத்தியசாலையில் அனுமதிக்கபட்ட போது உயிரிழந்துள்ளார்.


மேலும் வானில் பயணித்த உயிரிழந்தவரின் 40 வயதான மனைவி மற்றும் 17, 09, 05 வயதையுடைய மூன்று பிள்ளைகளும் கலேவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வினுவன்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதான அப்துல் ராசிக் அப்துல் நாசர் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்துடன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ)

சரணாலயத்தில் உள்ள உற்பத்தி நிறுவனத்தின்

# கழிவுப் பொருள்களால் சூழல் மாசடையும் நிலை

## இயற்கை வள ஆய்வுகள் மையம் தெரிவிக்கிறது



கொழும்பு. ஓக.22

முத்துராஜவெல சரணாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாம் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களால் மாசடையக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக இயற்கை வள ஆய்வுகள் மையம் தெரிவிக்கிறது.

கழிவுப் பொருள்கள் முறைப்படி வெளியேற்றப்படாமையால் சரணாலயப் பகுதியில் உள்ள உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பாம் எண்ணெய்யைச் சுத்திகரிக்கும் செயற்பாடுகள் 5 நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை மீறி இந்த நிறுவனங்களின் கழிவுப் பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன. இதன் காரணமாக சரணாலயத்தில் அமைந்துள்ள இயற்கையான நீரூற்றுக்களும் மாசடைந்து வருகின்றன. இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாத விடத்து இந்தக் கழிவுகள் நிலத்தடி நீருடன் கலக்கும் அபாயம் ஒன்று நிலவுவதாக அந்த ஆய்வு மையத்தின் தேசிய இணைப்பாளரான சுற்றாடலியல் நிபுணர் ரவீந்திர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எண்ணெய் சுத்திகரிப் பின்போது நுட்பமான ஒருவகைத் தூள் வெளிப்படுத்தப்படுவதாகவும் அத்தூள் ஏற்கனவே சரணாலயத்தில் அமைந்துள்ள ஹமில்ற்றன் ஓடைப் பிரதேசத்தை முழுமையாக மாசடையச் செய்துள்ளது.

இதன் காரணமாக அந்தப் பிரதேசவாசிகளுக்கு சுவாச நோய்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் ரவீந்திர காரியவசம் மேலும் தெரிவித்தார்.

1996 ஒக்ரோபர் 31 ஆம் திகதி இந்த முத்துராஜவெல சதுப்பு நிலத்தை அண்டிய பிரதேசம் சரணாலயமொன்றாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு அது 2.559 ஹெக்ரேயர் நிலப் பரப்பைக் கொண்டதுமாகும். தேசிய ஈர வலயப் பிரதேசங்களிலொன்றாகவும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-22)

### பாராட்டி வாழ்த்துகின்றேன்



மாந்தை கிழக்கு பிரதேச இணைப்பாளரும் சமூக சேவையாளருமாகிய *பொன்னுச்சாமி பிருந்தாபன்* அவர்கள் கடந்த 14.08.2013 அன்று சமாதான நீதிவானாக, நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சமுர்த்தி நியமனங்கள் கிடைக்க சேவையாற்றிய இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**சமுர்த்தி உத்தியோகத்தர்.**

## 'நலமாக வாழ்வோம்' இன்று சொற்பொழிவு

யாழ்ப்பாணம். ஓக.22

யாழ்.றோட்டறிக் கழகத்தின் வருகையாளர் உரை நிகழ்வில் "நலமாக வாழ்வோம்" என்ற தொனிப் பொருளில் இன்று மாலை 5 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள 'உதயன்' விருந்தினர் விடுதியில் பிரிட்டனில் இருந்து வருகைதந்துள்ள உணர்வழியியல் நிபுணர் வைத்திய கலாநிதி ஏ.ஜோதிலிங்கம் உரையாற்றவுள்ளார். (ஒ-5)

### அகவை வாழ்த்தும் சேவை நயப்பும்



எமது பாடசாலையின் பழைய மாணவியும் உபஅதிபருமான

**திருமதி இ. பற்குணராஜா**

அவர்கள் இன்று 59ஆவது அகவையை பூர்த்தி செய்வதையிட்டும் அவரது ஓய்வுக்காலம் இனிதே அமையவும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெவிரித்துக் கொள்கின்றோம்.

**சேவை விவரம்**

23.01.1975 - 08.06.1977 வரை
பதுளை ஹொப்டன் பழைய இஸ்தோர் தோட்டப் பாடசாலை

09.06.1977-03.03.1980 வரை
பதுளை ஹொப்டன் பழைய அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

04.03.1980 - 31.12.1982 வரை
கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை

01.01.1983 - 31.12.1984 வரை
பதுளை வேவல்கின்ன அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

01.01.1985 - 31.01.1985 வரை
யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்

01.02.1985 - 21.08.2013 வரை
யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்

(C/11458)(10,14) ஆசிரியர் கழகம் - யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி

### மரண அறிவித்தல்



## நவரத்தினம் ஸ்ரீரங்கராசா

*(சிறி- ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)*

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் ஸ்ரீரங்கராசா நேற்று (21.08.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் உமாதேவி தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் (அம்பிகா) அன்புக் கணவரும் ஞானாஜினியின் தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2013) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் தெற்கு, காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு, ஏழாலை.
0774930671 (39070)

தகவல்:
குடும்பத்தினர்.

## நல்லூரில் உரை

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை இரவு 7.15 தொடக்கம் 7.45 மணி வரை "வாழ்க்கையின் குறிக்கோள்கள்" எனும் தொனிப் பொருளில் சின்மய மிஷனின் ஜாக்கிர சைதன்ய சுவாமிகள் உரையாற்றவுள்ளார். (ஒ-4)

# மரண அறிவித்தல்

## கந்தசாமி தனபாலசிங்கம்



நல்லூர், திருநெல்வேலி, முடமாவடியைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தை வாழ்விடமாவும் சுவிஸ் Zurichkilchberg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தனபாலசிங்கம் (18.08.2013) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி- திரவியம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- பிள்ளையம்மா தம்பதியரின் மருமகனும், சிரோன்மணி (பேபி) அவர்களின் அன்புக் கணவரும், பிரசன்னா, பிரியங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரஞ்சினி அவர்களின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பவளகாந்தன் (பிரான்ஸ்) மற்றும் யோகேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற நடராசா (இலங்கை) மற்றும் மல்லிகாதேவி (நெதர்லாந்து), காலஞ்சென்றவர்களான பொன்மலர் (இலங்கை), யோகேஸ்வரன் (நெதர்லாந்து) மற்றும் வரதலட்சுமி (பிரான்ஸ்), குணலட்சுமி (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), விஜயலட்சுமி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச்சகோதரரும், அனுசன், அபினா ஆகியோரின் அன்புப் பேரனும், புவனேஸ்வரி, சிவனேசன், இரஜேஸ்வரி, தியாகராசா, செல்வநாயகம், நகுலேஸ்வரி, பிறேம்குமார், ஜெயக்குமார், பிறேமாவதி, அருணோதயம், திருநாவுக்கரசு, பரமலிங்கம், காலஞ்சென்ற நவமணி மற்றும் முருகலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2013) வியாழக்கிழமை Krematorium Nordheim, Kaferhol zstrasse 101,8046 Zurich, Switzerland இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(c/11455)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

## கனகசபாபதி பரமேஸ்வரி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 18.10.1933 | 25.07.2013 |

இன்று (22.08.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கோட்டுக்கொள்கின்றோம்.

பூநாறி மரத்தடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்,

குடும்பத்தினர்.

மடிகணனிகள் 45,000/- முதல்
(15.6"/500GB HDD /2GB DDR III)



☆Genuine Products



கணனிகள் 46,000/- முதல்
(18.5"/500GB HDD /2GB DDR III)

LED TV 18,000/- முதல்



TOSHIBA
lenovo

3 வருட உத்தரவாதத்துடன்

மேலும் பல விலைக்கழிவுடன்
Subwoofers, Printers, Routers, Web Camera, Scanner, Headphone, Laptop Cooling Pad & Accessories

ஒரே கூரையின் கீழ் எமது சேவைகள்.
* Computer Network & Maintenance, Internet, Router, ADSL Setup
* Computer, Printer, Laptop, UPS, LED & LCD Monitor Repairs.

MICRO PC SYSTEMS

வெள்ளவத்தை:-115C, W.A Silva Mw,011-2367405,யாழ்ப்பாணம்:-218,Hospital Rd, 021-2225893, வவுனியா:-73, 2nd Cross St,024-2221969, நெல்லியடி:-Kodikamam Rd, 021-2262929,கிளிநொச்சி:-A9 வீதி கச்சேரி முன்னால், 021-2285593, திருகோணமலை:- 235, Main St(வசீஹரன் ஹாட்வெயார் முன்னால்) , 026-2226977

# நினைவுப் பேருரை



யாழ்ப்பாணம், ஓக. 22
இரா.சிவலிங்கம் ஞாபகார்த்த 14 ஆவது நினைவுப் பேருரை நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.
தோட்ட உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளரும், ஞாபகார்த்த குழுவின் தலைவருமாகிய எஸ். வாமதேவன் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார்.
இந்த நிகழ்வில் "இலங்கையின் அரசியல் கலாசாரமும் சிறுபான்மையினரின் உள் முரண்பாடுகளும்" எனும் பொருளில் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். அனீஸ் சிறப்புரை நிகழ்த்துவார்.
இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை சுகுமாரன் விஜயகுமார் நிகழ்த்துவதுடன் இரா. சிவலிங்கத்தின் உருவப் படத்துக்கு முன்னாள் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஸ்ணன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவார். (அ-14)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# அ.அட்டை விண்ணப்பமுடிவு செப்ரெம்பர் 10 வரை நீடிப்பு

தினால் வழங்கப்பட்ட மதகுருமாருக்கான அடையாள அட்டை மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை என்பனவற்றைப் பயன்படுத்த முடியும்.
தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டைக்கு கிராம சேவையாளர்கள் ஊடாக விண்ணப்பிப்பதற்கு செம்ரெம்பர் 3 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.
இந்த கால எல்லை போதாது என்று அரசியல் கட்சிகள் தெரிவித்ததையடுத்து செம்ரெம்பர் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்படுள்ளது - என்றார். (த-5)

# 'சிங்கள குடியேற்றத்தை நிறுத்து' மட்டக்களப்பில் நேற்றுக் கோஷம்

பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட படுவான் கரை கெவிலியாமடு, புளுகுணாவை உள்ளிட்ட தமிழ் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அந்தக் குடியேற்றத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கோரி பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்கு முன்னால் இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.
'நீதி அந்தியைக் களையட்டும் நியாயம் மலரட்டும்' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், 'மீறாதே மீறாதே சட்டத்தை மீறாதே?', 'அரச அதிபரே! சோரம் போகாதே?', 'அத்துமீறிய குடியேற்றத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடு', 'கதிரைக்காக காணி அபகரிப்புக்கு துணைபோகாதே?', 'சமாதானம்என்ன சாத்தானின் ஆக்கிரமிப்பா?', 'அமைச்சரின் முகஸ்துதிக்காக அநீதிக்கு துணை போகாதே?', 'காணி அபகரிப்பை நிறுத்து!', 'சட்டம் ஆளுநரிடமா? அமைச்சரிடமா? அதிகாரியிடமா? புத்தபிக்குவிடமா? இராணுவத்திடமா? எடுபிடிகளிடமா?' உள்ளிட்டவாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.
இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேந்திரன், சீ.யோகேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா. துரைரட்ணம், பிரசன்னா இந்திரகுமார், துரைராஜசிங்கம், ஜனா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (த)

# யாழ்ப்பாணத்தை தளமாக பாவித்து இந்திய நிலைகளைத் தாக்கத் திட்டம்

தீவு பாதுகாப்பாக உள்ளது என்றும் எந்தவொரு ஆயுதக் குழுவும் அவ்வாறு தாக்குதல் நடத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.
இலங்கையிலிருந்து தென்னிந்தியாவிலுள்ள முக்கிய நிலைகளைத் தாக்குவதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதுடன் அதற்காக 8 பேர் தற்போது பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்ற எச்சரிக்கையை இந்தியாவின் மத்திய புலனாய்வு முகவர் அமைப்பு மகாராஷ்டிர மாநிலப் பொலிஸாருக்கு வழங்கியுள்ளது.
புலனாய்வுத் துறையினரின் எச்சரிக்கையின் படி பெரும்பாலும் இந்தத் தாக்குதல் யாழ்ப்பாணத்துக்கு அப்பால் ஏறத்தாழ 28 கி.மீ தூரத்திலிருந்து நடத்தப்படலாம். அதன் இலக்கு தமிழ்நாட்டில் மயிலாடுதுறை அல்லது மதுரையாக இருக்கலாம் என 'ரைம்ஸ் ஒப் இந்தியா' வெளியிட்டுள்ள செய்தியில் கூறப் பட்டுள்ளது.
ஒகஸ்ட் மாதம் நடுப் பகுதியில் வழங்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கை தகவலையடுத்து தாக்குதல் சில மாதங்களுக்குள் இடம்பெறலாம் என்று கருதப்படுவதால் இந்தியா முழுவதும் பாதுகாப்புத் துறையினர் விழிப்படையச் செய்யப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் துரிதமாக்கப்பட்டுள்ளன.
எச்சரிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு முக்கிய குறிப்பில் 2013 பெப்ரவரி 2 ஆம் திகதி இலங்கை புலனாய்வாளர்கள் சந்தேகத்தின் பேரில் மூன்று பாகிஸ்தான் நபர்களைக் கைது செய்திருந்தார்கள். இவர்கள் இலங்கைக் கடவுச் சீட்டுக்களை பயன்படுத்திக் கொண்டு மும்பை, திருவனந்தபுரம் ஆகிய நகரங்களுக்குச் சென்று திரும்பியுதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள்.
இவ்விதமான குழுக்கள் இலங்கையின் சிங்கள மீனவர்களின் உதவியுடன் கடல் வழிகளைப் பயன்படுத்தி தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களுக்குச் சென்றிருக்கக்கூடும் என்று உறுதிப்படுத்தாத செய்திகள் கூறுகின்றன. (த-ப)

# அழிப்பு

முள்ளிவாய்க்கால் பகுதியில் வீதியோரமாகக் குவிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பெரும்பகுதி திங்கட்கிழமை இரவு 7 மணியில் இருந்து அதிகாலை 5 மணிக்குள் அங்கிருந்து அகற்றப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர்.
"கனரக வாகனங்களின் உதவியுடன் போர் எச்சங்களை அகற்றும் பணியில் இராணுவத்தினர் போன்று தோற்றமளித்தவர்களே ஈடுபட்டனர்" என்று மக்கள் 'உதய'னிடம் தெரிவித்தனர்.
இது தவிர புதுக்குடியிருப்பு பொது விளையாட்டு மைதானம், சுதந்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானம் ஆகியவற்றிலும் போரில் சிதைந்த வாகனங்களின் பாகங்கள் குவிக்கப்பட்டிருந்தன. இவை வெளியே தெரியாதவாறு மூடி பெரிய மறைப்புக்களை இராணுவத்தினர் ஏற்படுத்தி வருகின்றனர் என்றும் மக்கள் கூறினர்.
இலங்கைக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வருகை தரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை 27 ஆம் திகதி வடக்குக்கான தனது பயணத்தை ஆரம்பிப்பார். முள்ளிவாய்க்கால்ப் பகுதிக்கும் செல்ல திட்டமிட்டுள்ளார் என்று கூறப்பட்டிருந்தது. தனது பயணக் காலத்தில் பெரும் பகுதியை அவர் வடக்கிலேயே செலவிடுவார் என்று அரசு கூறியிருக்கிறது. (உ-5.6)

# கேட்பதற்கெல்லாம் பதில் கூறமுடியாது

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய யாழ்.பொது நூலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார்.
நாவாந்துறையில் இராணுவத்தினரின் நிகழ்வில் ஆளும் கட்சி வேட்பாளர் கலந்துகொண்டமை, அதனை அறிந்து அங்கு சென்ற தேர்தல்கள் திணைக் கள அதிகாரிகள் படையின ரால் மிரட்டப்பட்டமை தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது ஆணையாளரிடம் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.
இதற்குப் பதிலளித்த தேர்தல் கள் ஆணையாளர் சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரி எனக்கு அருகில்தான் அமர்ந்திருக்கிறார். இன்றுவரை அவர் அப்படிப்பட்ட முறைப்பாடு எதனையும் செய்ய வில்லை-என்றார்.
இதன்போது தேர்தல்கள் ஆணையாளர் அருகிலிருந்த படையினரால் மிரட்டப்பட்ட அதிகாரி சிரித்தபடி பேசாமல் இருந்தார்.
முறைப்பாடு செய்ய முடியாதளவுக்கு இராணுவத்தினர் அந்த அதிகாரியை மிரட்டியுள்ளனரா? என்று ஊடகவியலாளர்கள் ஆணையாளரிடம் பதில் கேள்வி எழுப்பினர். இதற்கு தேர்தல் திணைக்கள அதிகாரிகள் அப்படியொரு சம்பவம் இடம் பெற்றால் முறைப்பாடு செய்யமாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா என ஊடகவியலாளரைப் பார்த்துக் கேட்ட தேர்தல்கள் ஆணையாளர் நீங்கள் ஊடகவியலாளரா? பொலிஸாரா என்றும் கேள்வி எழுப்பினார்.
அப்படியானால் அவ்வாறான சம்பவம் எதுவும் இடம் பெறவில்லையா? என்று ஊடகவியலாளர்கள் மீண்டும் கேள்வி எழுப்பினர். இதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் நீங்கள் கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் என்னால் பதிலளித்துக் கொண்டிருக்க முடியாது. சில கேள்விகளுக்கு விசாரணைகள் முடிந்த பின்னர்தான் பதிலளிக்க முடியும். மேற்படி சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திக் குறிப்புடன் இரு பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்-என்றார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தம்பிராசா தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிந்த பின்னர்தான் பதிலளிக்க முடியும்-என்றார். (த-5)




# தேர்தல் முறைப்பாட்டு நிலையம் நெடுந்தீவில்

வில்லை.
இருப்பினும் குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் நான் ஊடகங்கள் வாயிலாகவே தெரிந்து கொண்டேன். மேலும் குறித்த சம்பவத்துக்குப் பின்னர் நெடுந்தீவில் பிரசார நடவடிக்கைகளை வேட்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர். எனவே இனி அங்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று நினைக்கின்றோம்.
தேர்தல்கள் திணைக்களத்தினால் நெடுந்தீவிலும், பருத்தித்துறையிலும், சாவகச்சேரியிலும், சண்டிலிப்பாயிலும் தேர்தல் முறைப்பாட்டு பிரிவு திறக்கப்படவுள்ளது - என்றார். (த-5)

# பறியுங்கள் துப்பாக்கிகளை

கலந்துரையாடலின் போது உத்தரவிட்டார்.
இராணுவத்தினர் தற்போது அரசியல் நடவடிக்கைகளில் தலையிடுகின்றனர். அவர்களையும் ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யலாம் என அரசயில் கட்சி ஒன்றின் பிரதி நிதி தேர்தல்கள் ஆணையாளரிடம் தெரிவித்தார்.
தேர்தல் காலத்தில் இராணுவம் வீடுகளைக்கையளிப்பது, ஆளும் கட்சியின் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படுதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது தேர்தல்கள் ஆணையாளரிடம் சுட் டிக்காட்டி னோம். அவர் தகுந்த பதில் வழங்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (த-5)

# 2 இலங்கை ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க மறுத்தது அமெரிக்கா

வக் கருத்தரங்குக்கு அனுப்பு வதற்கு, இலங்கை இராணு வத் தலைமையகம், மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மற்றும் இராணுவச் செயலர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, வன்னிப் படைகளின் தலை மையகத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா ஆகியோரின் பெயர்களைப் பரிந்துரைத்திருந்தது.
இவர்களில் மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவின் பெயர் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஏனையவர்கள் பொறுப்புக்கூறல் விவகாரங்களில் சிக்கியுள்ளதால், அவர்களின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை இராணுவத் தலைமையகத்துக்கு அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின்போது, 57 ஆவது படைப் பிரிவின் தளபதியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ்.
இவர் ஜேர்மனிக்கான இலங்கையின் பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்டபோது, போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர் என்ற குற்றம் சாட்டப்பட்டதுடன் அது தொடர்பான பல தகவல்களும் வெளியாகியிருந்தன. சுவிற்சர்லாந்தில் இவருக்கு எதிராகப் போர்க்குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, வன்னியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடாத போதிலும், போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை இராணுவத்தின் புனர் வாழ்வு ஆணையாளராக நியமிக்கப்பட்டவர். சரணடைந்த, கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர். மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவை அமெரிக்கா சில மாதங்களுக்கு முன்னரும் இராணுவப் பயிற்சிக்கு ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தது.
வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும், போரில் ஈடுபட்ட 53 ஆவது படைப்பிரிவின் தளபதியாகப் பதவி வகித்தவர் என்று காரணம் கூறப்பட்டே அவர் நிராகரிக்கப்பட்டிருந்தார்.
எனினும், அவர் அமைதிக் காலத்திலேயே 53ஆவது படைப் பிரிவின் தளபதியாக நியமிக்கப்பட்டார் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கத் தூதரகத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

உதயன்
22/08/2013

## மென்பந்து கிரிக்கெட் தொடர் எதிர்வரும் சனியன்று



யாழ்ப்பாணம், ஒக.22

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் பங்குபற்றும் 15 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துச் சுற்றுத் தொடர் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

குறித்த தொடரில் வடமாராட்சிப் பிரிவிற்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் தென்மராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்திலும், வலிகாமம், தீவகப் பிரிவுகளுக்கான கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ற-23)

# வானவில்லை வீழ்த்தி வடதாரகை அரையிறுதிக்கு தெரிவாகியது


யாழ்ப்பாணம், ஒக.22

வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் மூன்றாவது காலிறுதியாட்டத்தில் வடதாரகை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாவது காலிறுதியாட்டத்தில் வடதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வானவில் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வடதாரகை விளையாட்டுக்கழக அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 317 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் அரவிந்தன் 93 பந்துகளுக்கு முகம் கொடுத்து 11 நான்கு ஓட்டங்களில், ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 87 ஓட்டங்களையும், சுகந்தன் 61 ஓட்டங்களையும், பிரகாஸ் 31 ஓட்டங்களையும், குமாரன் 23 ஓட்டங்களையும், அமிலன் 32 ஓட்டங்களையும், யசிபன் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் வானவில் விளையாட்டுக் கழக அணி சார்பாக கிசோர் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 59 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மாறன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 55 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், புரட்சிமாறன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், வினோத் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

318 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வானவில் விளையாட்டுக்கழக அணியினர் 28.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

அதில் பருசூட்டன் ஆட்டம் இழக்காமல் 39 ஓட்டங்களையும், நிரோஷன் 13 ஓட்டங்களையும், புரட்சிமாறன், வினோத் ஆகியோர் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வடதாரகை விளையாட்டுக்கழக அணி சார்பாக அகிலன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், அமில் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு ஓர் இலக்குகளையும், ஜீவன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், யசிபன் 4.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23)

## போட்டி முடிவுகள்

### சென்.பீற்றர்ஸ் வி.க. உதைபந்துத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக.22

நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நடந்தும் நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழ்க அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. அதையடுத்து வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.. (ற-23)

# ஆவரங்கால் மத்தி, காங்கேசன்துறை ஐக்கியம் தேசிய மட்டக் கரப்பந்துப் போட்டிகளுக்குத் தகுதி



ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்



காங்கேசன் துறை ஐக்கிய இளைஞர் கழகம்

யாழ்ப்பாணம், ஒக.22

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வடமாகாண ரீதியாக இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடந்திய ரூபவாஹினி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியும், பெண்கள் பிரிவில் காங்கேசன் துறை ஐக்கிய இளைஞர் கழக அணியும் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் சிகரம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய இளைஞர் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு பாண்டியன் குளம் இளைஞர் கழக அணி மோதியது.

அதில் காங்கேசன்துறை ஐக்கிய இளைஞர் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

## விளையாட்டு அலுவலருக்கான பயிற்சிமுகாம்

வலி.வடக்கு, ஒக. 22

இலங்கை கல்வி அமைச்சால் பாடசாலைகள் மட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் முயற்சியாக வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட துறை சார்ந்த விளையாட்டு அலுவலர்களுக்கான அகில இலங்கை ரீதியான பயிற்சி முகாமின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

களுத்துறை பஸ்துன்ரட்ட தேசிய கல்வியற் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த பயிற்சி முகாமில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மற்றும் மெய்வன்மை விளையாட்டுக்களுக்கான மேலதிக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாணத்தில் இருந்து குறிப்பிட்ட ஆறு விளையாட்டுக்களுக்கும் உரிய ஆசிரியாகள் பன்னிரெண்டு கல்வி வலயத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட முதற்கட்ட பயிற்சிகள் 23ஆம் திகதியுடன் நிறைவடைந்தன. (ற-86)

# சூதாடுவது எவ்வாறு என்று பயிற்சியளிப்பார் அஸாருதீன்


## கிண்டலடிக்கிறார் வினோத் காம்ப்ளி

அசாருதீனை பயிற்சியாளராக நியமித்தால் சூதாட்டத்தில் எப்படி ஈடுபடுவது என்று இளைஞர்களுக்கு பயிற்சி கொடுப்பார் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் வினோத் காம்ப்ளி கிண்டலடித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான அசாருதீனுக்கு ஜம்மு காஷ்மீர் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக பணியாற்ற அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக தமது ருவிட்டர் பக்கத்தில் கடுப்புடன் கருத்துப் பதிவிட்டிருக்கிறார் வினோத் காம்ப்ளி.

அதில் சூதாட்டத்தில் ஈடுபட்டதை குரோஞ்சே ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனால் நமது முன்னாள் அணித் தலைவர் மட்டும் ஒப்புக் கொள்ள வில்லை. அனேகமாக அவர் இளைஞர்களுக்கு எப்படி கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடுவது என பயிற்சி கொடுக்க விரும்புகிறார் என்று நினைக்கிறேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





அதேவேளை, 2011ஆம் ஆண்டு அசாருதீன் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தியிருந்தார் காம்ப்ளி. 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கைக்கெதிரான அரையிறுதி ஆட்டத்தில் களத்தடுப்பு செய்ய அசாருதீன் முடிவெடுத்தது குறித்து சந்தேகமாகவுள்ளது என்பதே அது. அந்தக் குற்றச்சாட்டு அந்தக் கால கட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ற)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக.22

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:

பி.ப. 3.30 மணி
தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் நவிண்டில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.30 மணி
கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் எதிர் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக் கழகம். (ற-422-400)



## விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி, ஒக.22

பருத்தித்துறை மாதனை விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் மாதனை சனசமூக நிலையத்தின் 4ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட மட்டத்தில் கிரிக்கெட், கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

5 பந்துப்பரிமாற்றங்கள், 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டவையாக கிரிக்கெட் தொடர் இரு பிரிவுகளாகவும், ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் மாதனை சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ற-8)

# பகல் இரவு டெஸ்ட் போட்டிகள் கொண்டுவரப்படுவது அவசியம்

## - ட்ராவிட் கருத்து



'20/20' கிரிக்கெட் போட்டியால் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிதனது மதிப்பை இழந்து வருகிறது. டெஸ்ட் போட்டிக்கும் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை அதிகரிக்க செய்ய சர்வதேச கிரிக்கெட் சபை' பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நிலையில் பகல்-இரவு டெஸ்ட் போட்டியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ட்ராவிட் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது.

டெஸ்ட் கிரிக்கெட்டை பகல்-இரவு போட்டியாக நடத்த திறந்த மனதுடன் அனைத்து அணிகளும் முயற்சிக்க வேண்டும். மின்னொளியின் கீழ் டெஸ்ட் போட்டி நடப்பதால், அதன் பாரம்பரியத் தன்மைக்கு எந்தவித அச்சுறுத்தலும் வராது. இந்த போட்டிகளில் 'பிங்க்' நிற பந்துகளை பயன்படுத்த யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 'பிங்க்' நிற பந்துகளில் விளையாடுகையில் பிரச்சினை இருப்பதாக ஒரு தரப்பினர் கூறுவதை நான் அறிவேன். 'பிங்க்' நிற பந்தில் விளையாடிய அனுபவம் எனக்கும் கொஞ்சம் உண்டு. அதை எதிர்கொண்டு ஆடுவதில் எந்த பிரச்சினையும் இருப்பது போல் எனக்குத் தெரியவில்லை.

இதே போல் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் விளையாடும் போது பனியின் தாக்கம் இருக்கலாம். சரியான காலத்தில், சரியான இடத்தில் போட்டி அட்டவணையை அமைத்தால் இரவில் பனிப் பொழிவுப் பிரச்சினையைத் தவிர்க்கலாம். ரசிகர்களின் கூட்டத்தை ஈர்க்க பகல்-இரவு டெஸ்ட் போட்டி அவசியமாகும்.

காலத்திற்கு தகுந்தாற் போல் மாற்றங்கள் வேண்டும். அதற்காக 20/20 கிரிக்கெட்டை மட்டும் பிரபலப்படுத்த வேண்டும் என்று அர்த்தம் கிடையாது. டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும் மாற்றம் தேவை. இங்கிலாந்தில் நீண்ட காலம் நடந்து வரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் கூட சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. முன்பு போல் இல்லாமல் ஆட்டம் பாதிக்கப்படுவதை தவிர்க்க விம்பிள்டனில் மேற்கூரை கொண்ட மைதானம் பயன்படுத்தப்படுவதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

எனவே பகல்-இரவு டெஸ்ட் போட்டிகளை நடத்துவதற்கான நடைமுறைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும். 20/20 சர்வதேச கிரிக்கெட் போட்டிக்காக, டெஸ்ட் போட்டிகளின் எண்ணிக்கையை குறைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது-என்றார்.

# ஆபாச நடனத்தால் சிக்கிய வீரர்கள்



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மூன்று பேர் ஆபாச நடனம் பார்த்து ரசித்தார்கள் என்ற சர்ச்சை கிளம்பியுள்ளது.

பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயுடனான தொடரில் பங்கேற்பதற்காக அந்த நாட்டுக்கு பயணமாகியுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி வீரர்களான ஜுனைத் கான், அன்வர் அலி மற்றும் அலி ஆசாத் ஆகிய மூவரும் லாகூரில் உள்ள அரங்கு ஒன்றில் நடைபெற்ற ஆபாச நடனத்தை பார்த்து ரசிப்பதை ரகசியமாக வீடியோப் பதிவு செய்து தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்பியுள்ளது.

இதனால் வீரர்கள் மூவரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரங்குகளில் நடக்கும் இது போன்ற பாலியல் சார்நடனங்களை நடிகைகள் மேடையில் கவர்ச்சியாக ஆடுவார்கள். சிம்பாப்வே செல்வதற்கு முன்பே பாகிஸ்தான் வீரர்கள் மூவரும் இந்த ஆபாச நடனத்தை பார்த்து சர்ச்சையில் சிக்கியுள்ளனர்.

எனினும் இந்த நிக்ழ்வில் நடனம் ஆடிய ஒரு பெண் கூறுகையில், "ஜுனைத் எனது நடனத்தை பார்க்க வந்தது மிகவும் மகிழ்ச்சி. அவர் தான் எங்களில் பெரும்பாலானோருக்கு பிடித்த வீரர்" என்று தெரிவித்துள்ளார்.

(ங)

# ரைடருக்குத் தடை



உள்ளூர் கிரிக்கெட் போட்டியின் போது ஊக்கமருந்து உட்கொண்டமை உறுதி செய்யப்பட்டமையால் நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் ஜெசி ரைடருக்கு 6 மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து அணியின் சர்ச்சைக்குரிய கிரிக்கெட் வீரர் ஜெசி ரைடர். 29 வயதான இவர் நியூஸிலாந்து அணிக்காக 18 டெஸ்டில் பங்கேற்று 1269 ஓட்டங்களும் , 39 ஒருநாள் போட்டியில் 1100 ஓட்டங்களும் பெற்றுள்ளார். ஆயினும் கடந்த பெப்ரவரி 2012க்கு பின் சர்வதேச போட்டிகளில் ரைடர் பங்கேற்கவில்லை.

ஆனால் உள்ளூர் போட்டிகளில் மட்டும் பங்கேற்கும் இவர், கடந்த மார்ச் மாதம் நடந்த உள்ளூர் போட்டியொன்றின் போது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை ரைடர் உட்கொண்டார் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

இதையடுத்து நியூஸிலாந்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு ரைடருக்கு 6 மாதங்கள் எந்தவிதமான கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கேற்கக்கூடாதென்று தடைவிதித்துள்ளது.

ரைடர், கடந்த மார்ச் மாதம் குடிபோதையில் இருந்த போது மர்ம நபர்களால் தாக்கப்பட்டு கோமா நிலைக்குச் சென்று குணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

**கடந்த மார்ச் மாதம் நடந்த உள்ளூர் போட்டியொன்றின் போது தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை ரைடர் உட்கொண்டார் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.**

# மன்செஸ்டர் அபார வெற்றி




இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் நியூகாசில் யுனைட்டட் அணிக்கெதிரான போட்டியில் மன்செஸ்டர் சிட்டி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் ஆரம்பத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய மன்செஸ்டர் சிட்டி அணி, 6ஆவது நிமிடத்திலேயே முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது. டேவிட் சில்வா அந்தக் கோலை அடித்தார்.

அதன் பின்னர் போட்டியின் 22 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிட்டியின் சேர்கியோ அகுவரே கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க, மன்செஸ்டர் சிட்டி அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

போட்டியின் 40ஆவது நிமிடத்தில் நியூகாசில் யுனைட்டட் அணியின் ஸ்டீவன் ரெய்லர் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட, நியூகாசில் யுனைட்டட் அணி 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இரண்டாவது பாதியில், போட்டியின் 50ஆவது நிமிடத்தில் யாயா ருவரேயும், 74ஆவது நிமிடத்தில் சமிர் நஸ்ரியும் தலா ஒவ்வொரு கோலை அடிக்க, மன்செஸ்டர் சிட்டி அணி 4-0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றது. (ங)

**போட்டியின் 22ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிட்டியின் சேர்கியோ அகுவரே கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க, மன்செஸ்டர் சிட்டி அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.**

## மரண அறிவித்தல்

### சண்முகம் அமிர்தலிங்கம் (சீனித்துரை)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை வசிப்பிட மாகவும் கொண்ட சண்முகம் அமிர்தலிங்கம் (சீனித்துரை) நேற்று (21.08.2013) புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - செல்லம்மா தம்பதியரின் இளைய புதல்வனும் இரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் பிறேமச்சந்திரன், ராமச்சந்திரன் (சுவிஸ்), லோகேஸ்வரி, சர்வேஸ்வரி, கேதீஸ்வரி (கனடா), விமலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலேஸ்வரி, கௌரி, சத்தியமூர்த்தி, முருகேசம்பிள்ளை, ஈஸ்வரதாஸ், கஜானா ஆகியோரின் மாமனும் சரஸ்வதி, ஆச்சிப்பிள்ளை, விசாலாச்சி, கண்மணி, கிருஸ்ணபிள்ளை, பரஞ்சோதி ஆகியோரின் சகோதரனும் பாலசிங்கம், தங்கராசா, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் பிரிந்தா, சசிகரன், கோவிகரன், அனுரதன், தனுரதன், றவீஷான், சஞ்சிவ், ரஜீவ், நிரோஜ், சஜித்தா, யோபிகா, விந்துயா, நிருபன், பிறேமரூபா, றஜிசங்கர், கிசோபன், அபிசன், விதுஷன், வினுஸ் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.

# கரீபியன் லீக்கில் டில்ஷானும்



இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்ஷானும் கரீபியன் பிறீமியர் லீக் தொடருக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவர் கயானா அணி சார்பாக விளையாடவுள்ளார்.

கயானா அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றி வந்த நியூஸிலாந்து வீரர் மார்ட்டின் கப்ரில் உபாதைக்குள்ளானதாலேயே அவருக்குப் பதிலாக திலகரட்ண டில்ஷான் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி கயானா அணி சார்பாக திலகரட்ண டில்ஷான் அரையிறுதிப் போட்டியில் பங்கேற்கவுள்ளார். கயானா அணி சார்பாக இலங்கையின் லசித் மலிங்கவோடு இணைந்து திலகரட்ண டில்ஷான் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்.

கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் லசித் மலிங்க தவிர, முத்தையா முரளீதரன், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன ஆகியோரும் விளையாடி வருகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த கயானா அணியின் பயிற்றுவிப்பாளர் றொஜர் ஹார்ப்பர், "மார்ட்டின் கப்ரில் காயமடைந்தமை எமக்கு இழப்புத்தான். எனினும் திலகரட்ண டில்ஷான் போன்ற உயர்நிலைத் தகுதிகொண்ட வீரர் எமது அணியில் இணைந்தமை அந்த வருத்தத்தை போக்கியுள்ளது." என்றார். (ங)

# அக்மலுக்கு வலிப்பு



பாகிஸ்தான் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான உமர் அக்மல் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறும் கரீபியன் 'லீக்' போட்டியில் விளையாட சென்றபோது விமானத்தில் சுய நினைவு இல்லா மல் மயங்கி விழுந்தார். அன்ரிகுவா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு அவருக்கு பல்வேறு பரிசோதனை செய்யப்பட்டபோது வலிப்பு நோயால் அவர் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதைத்தொடர்ந்து உமர் அக்மலுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய பாகிஸ் தான் கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்துள்ளது. மேற்கிந்திய தீவுகளில் தங்கியுள்ள அவரை உடனடியாக பாகிஸ்தானுக்கு திரும்புமாறு கோரப்பட்டுள்ளது. (ங)

# ஓய்வு பெறுகிறார் க்லோஸ்

ஜேர்மனியின் முன்னணி உதைபந்து வீரர் க்லோஸ் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

ஜேர்மனியின் லாசியோ அணியின் நட்சத்திர வீரர் மிரோஸ்லாவ் க்லோஸ்(வயது 35). இவர் இதுவரையிலும் ஜேர்மனிக்காக 128 ஆட்டங்களில் பங்கேற்று, 67 கோல்களைப் பெற்றுள்ளார். அதில் 14 கோல்கள் உலக கிண்ண ஆட்டங்களில் பெற்றவையாகும். இவர் இன்னும் ஒரு கோல் அடித்தால் பிரேசில் வீரர் றொனால் டோவின் சாதனையை சமன் செய்வார்.

இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு பிரேசிலில் நடக்கும் உலக கிண்ண தொடருடன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

ஜேர்மனிக்காக கிண்ணத்தை வெல்வதே தனது லட்சியம் எனக்கூறும் க்லோஸ், லாசியோ அணியுடனான ஒப்பந்தம் இந்த வருடத்துடன் முடிவதால், பண்டஸ்லிகா அணியுடனான தனது ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் எண்ணத்திலும் உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)



இலவச அறிமுக வாரம்
26.08.2013 → 30.08.2013 வரை
multimedia மூலம் பௌதிகவியல்
நேரம்: 9.00am → 4.00pm வரை
(வகுப்புக்கள் ஒரு மணித்தியாலம் மட்டுமே)
இடம்: APTECH - மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 077 6185064, 077 9339353
சரியானவற்றைத் தவறவிடுவதன் மூலம் பலர் எதிர்காலத்தை இழந்து விடுகின்றனர். இணையுங்கள் - உண்மையை அறியுங்கள்
பதிவுகள்:- Sat, Sun மட்டும்.

IELTS
வெளிநாடு செல்வோருக்கானது
ஆங்கிலம் தெரியாதவர்கள், ஓரளவு தெரிந்தவர்களுக்கென இரண்டு வெவ்வேறு பிரிவுகள்.
சரளமான பேச்சுப்பயிற்சியுடன் Listening, Reading, Writing பயிற்சிகள் பரீட்சைக்கேற்ற Practical ஆக வழங்கப்படுவதோடு 8 முன்னோடிப் பரீட்சைகள்.
பதிவும் அறிமுக வகுப்பும் 24.08.2013 சனி மாலை 3.00 pm
ஒவ்வொரு வகுப்பிலும் கையேடுகள், பரீட்சை வினாத்தாள் விடைகள், CD கள் இலவசம்
Spoken English வகுப்புகள் ஆரம்பம் 26.8.2013
பிரிவு 1 09 - 11.00
பிரிவு 2 11 - 01.00
SAAMSON Language Research Centre
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
077 621 4567

ரிக்கெற் இலவசம், உணவு இருப்பிடம் இலவசம்
மாதாந்தம் 2 இலட்சம் சம்பாதிக்கலாம்
டென்மார்க்கில் படிக்க உழைக்க 25.08.2013 வரை மட்டுமே சட்ட ஆலோசனை.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

5 வருட - 10 வருட விசா 3 இலட்சம் சம்பளம்
தங்குமிடம், உணவு இலவசம்
அமெரிக்காவில் படிக்க உழைக்க அதிரடி வாய்ப்பு விரைந்து வாருங்கள்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

edexcel
G.C.E (A/L) இன் பின்னர்...
Are you Ready?
Access Programme
www.bcas.lk
BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) / LLB (Hons)
BTEC HND Full Time / Part Time
Foundation Course
O/L
After A/L
இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாடநெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.
அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது.
IELTS
Dip. in English
கொழும்பிலிருந்து வருகை தரும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack
உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.
தொடர்புகளுக்கு 0777 102131
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T : 021 2219910 | E : info@bcas.lk
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar
MADRO 0777 799 598

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 2[illegible].08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.